திராவிடநாடு

13—5—62 | வார வெளியீடு | விலை 16 காசு

# போர்

—[நக்கீரன்]—


❊

போரென்று நீசொல்லு! சொல்லு!—உன்
புகழேட்டை நீதள்ளு! விள்ளு!— மொழிப்
போரென்று நீசொல்லு! சொல்லு!

நாடாண்ட தமிழினம் இன்று—வட
ஆட்சியாலே நலிவதைக் கண்டு—போர்க்
கொடியைக் கைக்கொண்டு நின்று—தமிழ்க்
கொள்கையை நீகாட்டு! வென்று! (போரென்று)

வீரத்தை விற்றுவிட் டாயோ—வீண்
வேலைதனைச் செய்யலுற் றாயோ?—தமிழ்
பாராண்ட தைமறந் தாயோ?—தெருப்
புழுதியினி லுழலுகின் றாயோ? (போரென்று)

பருவங்கள் போருக்கு இல்லை—புலி
பகைத்தன்மை திருநாட்டி னெல்லை—தனி
விரதங்கள் பயனளிக்க வில்லை—தமிழ்
விரோதிகள் தருகின்றார் தொல்லை. (போரென்று)



# உலகம் இதுதான்

—[மாமூலன்]—

உயிருக்குயிரானவளே,

உன் அருந்தோழி பல நாட்களுக்குப் பின்னுல் எழுதும் மடல் இது. 'மன அமைதியின்மையால் கருத்தில் தெளிவில்லை — அதனுல் இதுநாள்வரை நான் கடிதம் எழுதவில்லை' என்று நீ நினைக்கலாம். காரணம் அதுமட்டுமல்ல அல்லி.

'தன் வாழ்வின் மகிழ்ச்சியையும் இன்பத்தையும்தானே இழந்துவிட்டுத் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வதற்குப்பெயர்தான்'தியாகம்'. இப்படி நீ என் முடிவு கேட்டு எத்தனையோ முறை சொல்லியிருக்கின்றுய். அப்பொழுது எல்லாம் நான், 'மனிதனுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன தெரியுமா?' என்று கூறி எவ்வளவோ விளக்கங்கள் தந்திருக்கிறேன். அவ்வளவையும் கேட்டுவிட்டுச் சிரித்துக்கொண்டு சொல்லுவாய் 'உன்னைப் போல உலகில் உள்ள எல்லோரும் உள்ளம் படைத்திருக்கவேண்டும்' என்பாய்.

அல்லி, கடந்தகால நிகழ்ச்சிகளை ஏதோ தொடர்பு இல்லாமல் எழுதுகிறேன் என்று எண்ணுதே! தியாகத்தின் பெருமை பேசி என்னை நான் 'தியாகி' ஆக்கிக்கொண்டபொழுது—நீ சொன்ன மொழிகளின உண்மையை இப்பொழுது தான் நான் உணர்ந்தேன். அதனுல் எழுதுகிறேன். எனக்கு அந்த உண்மையை உணர்த்தியது யார் தெரியுமா? நான் யாருக்காகத் 'தியாகி'யானேனே அதே திருமகள் தான்.

ஆச்சரியமாக இருக்கிறதா உனக்கு? 'நீரின்றி உலகில்லை, நீயின்றி நானில்லை' என்று என்னை உயிருக்குயிராகக் காதலித்த முத்துவேலை, திருமகளுக்காக மறந்தேன். அதாவது மறக்க முயன்றேன்...... அதில் வெற்றியும் கண்டேன்.

முத்துவேல், திருமகளுக்கு உறவு முறையால் உரிமையுள்ளவர்தான். ஆனுல், அவருடைய உள்ளத்திற்கு உரிமையுள்ளவளாக நான் ஆட்சி செலுத்தினேன். அதனுல் திருமகளின் கைக்கிளை 'காதல்' வீழ்ச்சி அடைய, அவளின் எதிர் காலமே என்னுல் இருளடைந்ததாக எண்ணிக் கலங்க, — அவள் கண்ணீரைத் துடைக்க, நான் என் 'காதலை'த் தியாகம் செய்தேன். அப்பொழுது நீ என் முடிவு தவறு, தகாதது என்றெல்லாம் கண்டித்தாய். நான் குழம்பவில்லை, காரணம் என் 'தியாக உணர்ச்சியைக்' கண்டு திருமகள் பாராட்டிப் போற்றி அளித்த நன்றியுணர்வால் 'தியாகப் போதையில்' மயங்கிக் கிடந்தேன்.

ஞாலத்தை வெல்வதுபோலக் காலம் ஓடிற்று. திருமகள் முத்துவேலின் துணைவியானுள். நான் ஆசிரியை ஆனேன். 'வள்ளுவர் அனுதை விடுதி' என்னைப் பணியாற்ற அழைத்தது. அந்த விடுதியை நடத்தும் 'அருளாளன்' அன்பால் என்னைக் கவர்ந்தார். கனிவு தவழும் அவரது பேச்சும் அன்பும் என்னை ஒரு புதிய உலகத்திற்கு அழைத்தது. என்னை முழுதும் உணர்ந்த அவர் என்னை அவருடைய வாழ்வுக்கும் பணிக்கும் துணையாக்கினுர். உலகமே எங்கள் மகிழ்வுக்குத் துணையானதாக நான் நினைத்தேன்.

அருளாளன் ஆசிரியர் மட்டும் அல்லர். அவர் ஓர் எழுத்தாளர். கலை உள்ளம் கொண்டவர். வையத்தின் வாழ்வும் இன்பமும் மகிழ்வும் எனக்காகப் படைக்கப்பட்டதாக அவர் அன்பால் உணர்ந்தேன். யாரும் ஆதரவு காட்டாத அனுதை பேரும் புகழும் பெருவாழ்வும் சீரும் சிறப்பும் பெற்ருல் எப்படி மகிழ்வாளே, அப்படி மகிழ்ந்தேன்.

அதுவும் இரண்டு ஆண்டுகள் தான். ஒருநாள் ஏற்பட்ட 'கார் விபத்து' அவரை என்னிடமிருந்து பிரித்துவிட்டது. துணைக்குத் துணையாக இருந்தவர் என்னைத் தனியாக்கிச் சென்ருர்; என்ருலும், வள்ளுவர் அனுதை விடுதியை நடத்தும் பொறுப்பையும் பணியையும் தந்துவிட்டுச் சென்ருர்.

என் இன்னலையும் இடரையும் மறக்க அப்பணி அருமருந்தாய்த் தெரிந்தது. அப்பொழுதுதான் முத்துவேலைப்புற்றிப் பல செய்திகள் கேள்விப்பட்டேன். முத்துவேல் புகழ்பெற்ற திரைப்பட தயாரிப்பாளர் என்றும், அவர் தயாரிக்கும் படம் அனைத்தும் வெற்றிவிழாப் படங்கள் என்றும், அதனுல் பெருஞ் செல்வத்தைக் குவித்துக்கொண்டிருக்கிருர் என்றும், செல்வம் பெருகுவதுபோல, நாளுக்கு ஒரு 'பணக்காரரின் பழக்கம்' அவரிடம் குடியேறுகின்றது என்றும் சொன்னுர்கள்.

முத்துவேலுக்கு கனியும் கன்னியும் ஒன்றுதான. புத்தம்புதிய பூவையரும் போதையும் இல்லாமல் முத்துவேலால் இருக்க முடியாது என்றுகூடச் சொன்னுர்கள். என்னுல் அந்தஅளவு நம்பமுடியவில்லை. திருமகள் இந்த அளவுக்கு முத்துவேல் மோசமாகும்படி விட்டிருப்பாளா?

காதலித்தவன் கைவிட்டாலும் அவனையே கணவனுகப் பெறும் பேறு பெற்றவள், கட்டியவன் 'கண்டபடி' செல்லவிட்டிருப்பாளா? அவனைத் திருத்த விரும்பவில்லையா? அவளால் முடியவில்லையா?

அல்லி, திருமகள்தான் முத்துவேலைத்திருத்தவிரும்பவில்லை. முத்துவேலைப்பற்றி அவளுக்குக் கவலையே இல்லை. அவளுக்குத் தேவையான எல்லாம் பணம், பணம்.

உனக்கு வியப்புக்குமேல் வியப்பாக இருக்கிறதா? அதனுல்தான் உனக்குத் தெரிந்த நிகழ்ச்சிகளைக் கூட இப்பொழுது எழுதுகிறேன். உலகிலே நாம் பெறும் அனுபவம் கைமண் அளவுதான். அதனுல்

( 4-ம் பக்கம் பார்க்க )

20] ஆண்டு சந்தா ரூ. 8 (13—5—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 87

# பயம் வேண்டாம்

"எல்லாரும் ஒன்று சேருங்கள்; எல்லாக் கட்சியினரும் ஒன்று சேருங்கள்; முடியுமானால் எல்லா நாட்டினருமே ஒன்று சேருங்கள்; அப்படிச் சேர்ந்தால்தான் இந்தப் பெரிய எதிர்ப்பை ஓரளவுக்காவது சமாளிக்க முடியும்"

என்று தலையில் இருந்து கால்வரை பேசப்படுகிறது. பண்டிதநேருவும் இதைத்தான் இப்போது தம்முடைய மூலமொழியாக்கிக்கொண்டு பேசிவருகிறார்.

காங்கிரசுக்கட்சியிலே கடைசிப் படியில் நிற்கும் நிதானமிழந்தவரும் இதைத்தான் பேசத் தொடங்கியிருக்கிறார்.

நாளேடுகள், கிழமை ஏடுகள், திங்கள் ஏடுகள் பலவும் இப்போதைக்கு எழுதவேண்டியது இதுபற்றித்தான் என்று முடிவுகட்டி எழுதிவருகின்றன.

இப்படிப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் இலக்காகி நிற்கும் பொருள் என்ன என்ற ஐயப்பாடு சிலருக்கு எழலாம்.

வேறொன்றுமில்லை. திராவிட முன்னேற்றக் கழகம், அது, தோன்றிய நாளில் இருந்து இன்றுவரை கோரிவரும் நாட்டுப் பிரிவினைபற்றித்தான்.

இது நீண்ட நெடுங்காலமாகவே கேட்கப்பட்டுவரும் ஒரு கோரிக்கையேதவிரப் புதிதல்ல. என்ற போதிலும், இப்போது சின்னாட்களாக இதுபற்றிப் பெரும் அளவில், பெரிய தலைவர்களும் சிறிய தலைவர்களும், பெரிய ஏடுகளும் சிறிய ஏடுகளும் பேசியும் எழுதியும் வரக் காண்கிறோம்.

அதிலும், நடந்து முடிந்த தேர்தலில் இருந்து இப்பேரொலியின் முழக்கம் உலகத்தின் செவிகளில் நுழைந்துவிட்டது.

தேர்தலில் தி. மு. க. ஐம்பது இடங்களை, முப்பத்து நான்கு இலட்சம் மக்களின் வாக்குகளைக்கொண்டு பெற்றுவிட்டதிலிருந்து இந்தப் பேரொலி தனது முழு வடிவத்தையும் பெற்றுவிட்டது.

நாட்டிலுள்ள மக்களில் 34-இலட்சம்பேர் பிரிவினையை ஆதரித்தால் பாரதத்தின் ஒற்றுமை என்னாவது என்ற ஏக்கம் ஏற்பட்டுவிட்டது காங்கிரசாருக்கு.

நாட்டுப் பிரிவினை ஏற்பட்டுவிட்டால் பாரதம், பார்—அதமாகிவிடுமோ என்ற அச்சம் அவர்களைக் குடையத் தொடங்கிவிட்டது.

"பார்" என்றால், பூமி;

"அதம்" என்றால் அழிவு.

எனவேதான், அவர்களுடைய பாரதம், பார்—அதமாகிவிடுமென்று அஞ்சுகிறார்கள்—அலறுகிறார்கள்.

இந்த அச்சம் அவர்களுக்கு ஏற்படத் துளியும் காரணம் கிடையாது.

திராவிடநாடு பிரிந்துவிட்டால், பாரதத்தார் பயமற்று வாழலாம். நம்முடைய ஒத்துழைப்பு அவர்கட்கெப்போதும் உண்டு என்பதை நாம் வலியுறுத்திக் கூறிவந்திருக்கிறோம்.

திராவிடநாடு பிரிவதால், ஏதோ தீமைகள் ஏற்பட்டுவிடும் என்று அவர்கள் அஞ்சவேண்டியதில்லை.

பாரதம் இந்த நிலையில் இருக்கும்போதே சீனாவும் பாக்கிஸ்தானும் நாட்டைக் "கபளீகரம்" செய்யத் திட்டம் போடுகின்றன, என்று சில தலைவர்களும், ஏடுகளும் பேசியும் எழுதியும் வரக் காண்கிறோம்.

இது அவசியமற்ற—அனுபவமற்ற அச்சமாகும்.

திராவிடநாடு பிரியவேண்டுமென்ற கோரிக்கை உண்டாக்கப்பட்டபோதே, இந்த அவசியமற்ற அச்சத்திற்கு இடமில்லாது செய்யப்பட்டுவிட்டது.

அதாவது, திராவிடநாடு தனிநாடாகப் பிரிந்த பின்னர், யாதாயினும் வெளிநாட்டாரின் படையெடுப்பு ஏற்படுமாயின், அந்தப் படையெடுப்பை முறியடித்துப் புறமுதுகு காட்டும்படி செய்வதில் நாம்—திராவிடர்கள்—முன்வரிசையில் நின்று போராடுவோம் என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியிருந்தும், தெரிந்தும் தெரியாதவர்கள் போல் நடிக்கிறார்கள்.

நாம் ஏன் திராவிடநாடு தனியாகப் பிரியவேண்டுமென்று கேட்கிறோம் என்பதன் காரணங்களை விட்டுவிட்டு, காரணமற்ற ஒன்றை முன்னே தூக்கிவைத்துக் கொண்டு ஆடுகிறார்கள்.

அவர்களே சமயம் வாய்க்கும்போதெல்லாம் கூறுகிறார்கள்,

> "தற்போதைய அரசியல் சட்டத்தின் கீழ் இராச்சியங்களுக்குள்ள வருமான இனங்கள் குறைவு, வருவாய்-மேன்மேலும் அதிகரிக்கக்கூடிய இனங்கள் பலவும் மத்திய சர்க்கார் கையில் குவிந்திருக்கின்றன. எனவே இராச்சியங்கள் தங்கள் வாழ்வை வளம்பெறச் செய்வதற்கான திட்டங்களுக்கு, குறிப்பாகத் தொழில் வளர்ச்சிக்குவேண்டியபொருள்வசதியைப் பெற மத்திய சர்க்காரிடம் கையேந்தி நிற்க வேண்டியிருக்கிறது........"

என்று பேசியும் எழுதியும் வருகிருர்கள்.

அரசியர் சட்டம் ஓரவஞ்சனையாக வகுக்கப்பட்டிருக்கிறது.

அதிக வருவாய் உள்ள இனங்கள் எல்லாம் மத்திய சர்க்காரிடம் இருக்கிறது.

மற்ற இராச்சியங்கள் எல்லாம் மத்திய சர்க்காரிடம் கையேந்திப் பிழைக்கவேண்டியிருக்கிறது.

என்று அதி தீவிர காங்கிரசுக் காரராகத் தம்மை ஆக்கிக்கொண்டும், நினைத்துக்கொண்டும் இருக்கின்ற டி. டி. கே. போன்றவர்களே பேசுகின்ருர்கள் என்ருல், நாம் இதே காரணங்களைக்காட்டி நாட்டுப் பிரிவினை கோருவதில் தவறென்ன காணமுடியும்?

எனவே, நாட்டுப்பிரிவினையால் ஏதோ நாசம் வந்து விடப்போகிறது. வெளிநாட்டார் படையெடுப்புக் காத்துக்கிடக்கிறது என்பன போன்ற தேவையற்ற காரணங்களைக் காட்டிக் காலத்தைக் கடத்தாமல், பயம் விட்டுப், பிரிவினையால் ஏற்படும் நன்மைகளை நன்கு சிந்தித்து நமது கோரிக்கைக்கு இணங்குவதே நாட்டுக்கு நல்லதாகும்.

★

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

எனக்குக்கூட முதலில் வியப்பாகத்தான் இருந்தது.

தன் காதல் கைகூடவில்லையே என்று கதறி அழுதவள், நான் ஒதுங்கியதால் காதலனைக் கணவனாக வரப்பெற்று, கணவன் வேறு திசைநாட, அவளோ காசே குறியென இருக்கக் காரணம்!

திருமகள் மீது முத்துவேலுக்குள்ள வெறுப்பு, பழைய காதல் நினைப்பு, என்று நீயும் என்னைப் போல முதலில் நினைக்கலாம். ஆனல் உண்மை என்ன தெரியுமா? மனம் ஒப்பித்தான் முத்துவேல் திருமகள் கைத்தலம் பிடித்தாராம்—கலையுலக வாழ்வின் சூழ்நிலை அவரை அப்படி மாற்றிவிட்டதாம். உனக்கு எப்படி விவரம் தெரியும் என்று நீ கேட்கலாம்.

திருமகளின் செயலாளராகப் பணியாற்றும் பெண் மேகலை சொன்னுள். அவள், என் கணவர் நடத்திய அனாதை விடுதியில் பயின்றவள். அதற்காக அவள் செய்ய முன்வந்த உதவி, நன்றி மறந்த திருமகளைப்போலவா?

ஏது உனக்கு இன்னும் நிகழ்ச்சியைச் சொல்லாமல் ஏதேதோ எழுதிக்கொண்டிருக்கிறேன. சுருக்கமாக எழுதுகிறேன்.

அண்மையில் பெய்த பெருமழையால் எங்கள் விடுதியில் உள்ள கொட்டகை ஒன்று வீழ்ந்துவிட்டது. அதைப் புதுப்பிக்க 'நன்கொடைக்காக' திருமகள் பங்களாவுக்குச் சென்றேன். முத்துவேல்பற்றிக் கேட்டிருந்த 'புனிதச் செயதிகளால்' அவரில்லாத சமயம்தான் சென்றேன். திருமகள் ஏதோ 'டிக்டேட்' பண்ணிக்கொண்டிருந்தாள் மேகலையிடம். என்னை எப்படி வரவேற்ருள் தெரியுமா?

"உன்னை எல்லாம் யார் உள்ளே விட்டா...கண்டபடி உறவாடிக்கொண்டு உரிமை கேட்க வந்துவிட்டியா? கற்பனை உங்களுக்குத்தான் சொந்தமோ? முடிந்தால் 'கோர்ட்' டுக்குப்போய்ப் பார்த்துக்கொள்."

எனக்கு ஒன்றும் புரியவில்லை. குழம்பினேன், யாருக்காகக் காதலைத் 'தியாகம்' செய்தேனே, அவள் நெடுநாட்களுக்குப் பிறகு, என்னைச் சந்திக்கும்பொழுது எனக்குத் தரும் வரவேற்பு! அவளது செல்வச் செருக்கு என்னை அவமானப்படுத்தியது. ஆத்திரத்துடன் திரும்பினேன்.

நான் திருமகளின் மாளிகையைத் தாண்டிச் செல்லும்பொழுது பின்னல் ஓடிவந்து மேகலை தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டாள். திருமகள் எனக்கு அளித்த வரவேற்புக்கு அவள்தான் விளக்கவுரை தந்தாள். அடுத்ததாக முத்துவேல் தயாரிக்கும் படத்திற்கு திருமகள் தான் கதையும் உரையாடலும் எழுதுகிருளாம். அந்தக்கதை என் கணவர் எழுதிய கதையாம். அங்கு கொஞ்சம் இங்குகொஞ்சமாகத் திருத்தி அதைத் தன் உடைமையாக ஆக்கிக்கொண்டுள்ளாள் திருமகள். அதன் உரிமை கோரிவந்திருப்பதாக நினைத்து எனக்கு அந்த வரவேற்பை 'நல்கி' இருக்கிருள்.

நான் வந்த காரணத்தை அறிந்த மேகலை அவளாகவே, அவள் கணவருடைய உதவியுடன் எனக்கு உதவினுள். அவ்வுதவி சிறிது என்ருலும், ஞாலத்தினும் மாணப் பெரிதாக நான் காண்கின்றேன்.

பண ஆசையால் கதை எழுதியவளுக்குத் தரும் பணத்தை மிச்சப் பிடிக்கப்பார்க்கும் திருமகள், கணவன் கெட்டழிந்தாலும் காசுதான் தேவை என்று கருதக்கூடியவளாகி விட்டாள்.

பட்டுப்புடவைச் சிநேகிதிகள், பங்களாவில் வாழும் தோழிகள், காரிலே உலாவரும் காரிகைகள் இவர்கள் நட்பிலே வளரும் அவளுக்கு நீதி, தியாகம், கணவன் எல்லாம் காசுக்குப் பின்னுலேதான். அந்த அளவுக்குத் திருமகள் மாறி விடடாள்.

பணம், பங்களா, படாடோபம் இவற்றில் மயங்கிவாழும் அவளுக்காகத் 'தியாகம்' செய்தமைக்காக வெட்கமும் வேதனையும் அடைகிறேன்.

ஆனல், அல்லி, உணர்ந்து கொண்ட உண்மை பெரிது. 'நம்மைப்போல மற்றவர் உள்ளங்களை எதிர்பார்க்கக்கூடாது' என்பது தான்.

பரந்து விரிந்துகிடந்தாலும் கடல் நீர் குடிநீராகாது. சின்னஞ்சிறிய ஊற்றில் சுரக்கும் நீர் குடிநீராகும். கடல் நீர்தான் திருமகள், ஊற்று நீராக என்னைச் சொல்லவில்லை. மேகலையைக் கூறுகிறேன்.

மீண்டும் எண்ணிப்பார் எனக்கு உதவிய மேகலையையும், திருமகளையும், உனக்கு விளங்கும்.

ஆமாம் அல்லி, உலகம் இது தான்.

மடல் பெரிதாக இருக்கும் தாழை மலரினும் மகிழம்பூவின் மணம் இனிது. உனக்குப் புரியவில்லையா?

உன் தோழி,
**மான்விழி.**

★

# பத்தினிக் கோயில்

(கனகு)

"மாத்தயா, இது தான் நீங்கள் இறங்கவேண்டிய இடம்—லுணுகலை" என்று பஸ் கண்டக்டர் கூறிய வார்த்தைகள் சபாரத்தினத்தின் கவனத்தை ஈர்க்கப்போதவில்லை. எப்போதோ அவன் நினைவலைகளைவெட்டி இழுத்துக்கொண்டு விட்ட சிந்தனை வெள்ளத்தில் அவன் நன்றாக மூழ்கடிக்கப்பட்டுக் கிடந்தான்.

லுணுகலை என்ற அந்த ஊர் மலைச்சாரல் ஓரமாகப் பலவகை மரக் கூட்டங்கள் தோப்பாகத் தென்பட அதன் நடுவே அமைந்திருந்தது. அது நகரமல்ல. சிற்றூருமில்லை. ஏறத்தாழ நூறுகல்லுக்கப்பாலுள்ள மட்டக்களப்பில் வாழ்கின்ற சபாரத்தினம் இந்தப் பக்கம் இதற்கு முன் ஒரு தடவை கூட வந்தது கிடையாது. கொடிய விலங்குகள் நிறைந்து நடமாடும் அடர்ந்த காட்டினை ஊடுருவிக்கொண்டு பஸ் வந்தபோது, இனி என்றுமே காட்டைத்தான் பார்த்துக்கொண்டிருக்க நேருமோ என்று கலக்கமுற்றான் அவன்; என்றாலும் அந்தக் காட்டு வனப்பின் ஒவ்வொரு பாகத்தையும் மனத்திலே பதியவைத்துக்கொள்ளத் தவறவில்லை அவன். அவன் சிந்தனை கலையும்போது வண்டியிலிருந்த எல்லாரும் இறங்கி நெடுநேரமாகியிருந்தது. அவன் கீழே இறங்கும்போது வண்டியருகில் யாருமேயில்லை.

போகவேண்டிய இடத்தைப்பற்றி யாரிடம் கேட்பது, அங்கே எப்படிப் போவது என்ற யோசனையில் அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். சற்றுத் தொலைவில் நாலைந்து பேர், 'தோட்டக் காட்டுத் தமிழர்'கள் சீயாங்கொல்லை என்ற தோட்டத்தின் பெயரைக் கூறிக்கொண்டு ஏதோ உரையாடுவதுஅவன் காதிற் பட்டது.

"ஏனய்யா, உங்கள் ஊர் சீயாங்கொல்லைதானே?" என்று கேட்டவாறு உரையாடிக்கொண்டிருந்தவர்களின் அருகிற் சென்றான் சபாரத்தினம்.

அவர்கள் இவன் பக்கம் திரும்பினார்கள். ஒருவன் சிரித்தான். மற்றொருவன் 'ஊரா?' என்று ஏதோ விநோதத்தைக் கேட்பதுபோல் கேட்டான்.

"சீயாங்கொல்லை தோட்டமுங்க. அது ஊர் இல்லீங்க." என்றான் மற்றும் ஒருவன்.

"ஆமாம், தோட்டந்தான். நீங்கள் எல்லாம் அந்தத் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள்தானே? அந்தத் தோட்டத்திற்கு இங்கிருந்து எத்தனை கல்?"

"இங்கேயிருந்து நாலு கட்டைங்க. மலைக்காட்டு வழியா, ஒத்தையடிப் பாதையிலே போவணுமுங்க."

"அப்போ..." என்று எதையோ வினவ வாயெடுத்தான் சபாரத்தினம். ஒன்றும் தோன்றவில்லை. மௌனமானான்.

"நீங்க சீயாங்கொல்லைக்குப் போவணுமா? யார் வீட்டுக்குப் போகணுமுங்க? டீ மேக்கர் ஐயா வீட்டுக்கா, கிளார்க்கர் ஐயா வீட்டுக்கா?"

"யார் வீட்டுக்கும் இல்லை. நானே அங்கு வேலையாகப் போகிறேன்—ஆசிரியர் வேலையாக."

"ஓ. அப்புடின்னா சரிங்க. வாங்க போவலாம்." என்றான் முன்னால் வந்து பேசியவன்—முனியன் என்ற தொழிலாளி.

ஆள் உயரம் வளர்ந்திருக்கும் கத்திப்புல் காட்டு வழியே அந்த ஒற்றையடிப்பாதை சென்றது. மலையுச்சியிலிருக்கும் சீயாங்கொல்லையை நோக்கி அவர்கள் செங்குத்தாக ஏறிக்கொண்டிருந்தார்கள். அப்படியொரு செங்குத்தான வழியில் ஏறியறியாத சபாரத்தினத்திற்கு ஒவ்வோரடி எடுத்து வைக்கும்போதும் மூச்சுத் திணறியது. கால்கள் கடுத்தன. 'இந்த மலைக்காட்டிலிருந்து காலந்தள்ளுவது எப்படி, பணியாற்றுவது எப்படி' என்று திகைப்பும், குழப்பமும் அடைந்தான் அவன். வந்த வழியே திரும்பிச் சென்றுவிடலாமா என்றுகூட நினைத்தான்.

உடன்வந்த முனியனே பெட்டியையும், படுக்கையையும் தலையிற் சுமந்துகொண்டு [illegible] மலைமேல் ஏறி வந்துகொண்டிருந்தான். கால்கள் தடுமாற, களைப்பு மீதூரப் பின்னடைந்து, பின்னடைந்து வந்துகொண்டிருந்த சபாரத்தினத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் அவனுக்காக மெது நடையில் சென்றான்.

அங்கே மலைமேல் வரிசை வரிசையாக வளர்ந்துள்ள நெல்லி மரங்களையும், கடுக்காய் மரங்களையும் சுட்டிக்காட்டி அவற்றைப்பற்றி ஏதேதோ வலியப் பேசிக்கொண்டு வந்தான் முனியன். அந்தப் பேச்சுப் போக்கிலாவது சபாரத்தினம் தன் களைப்பை மறந்து வருவான் என்று எண்ணினான் போலும் அவன்.

பொழுது கரகரவென்று இறங்கிக்கொண்டிருந்தது. சீயாங்கொல்லை என்னும் அந்தத் தோட்டத்தை அடைய இன்னும் முக்கால் மைல் தான். என்றாலும் களைப்பு அளவு மீறிவிட்டது சபாரத்தினத்திற்கு.

வழியோரமாகப் பெரியதொரு ஆலமரம் தென்பட்டது. அந்த மரத்தடியை நெருங்கியதும் அங்கே அமர்ந்துவிட்டான் சபாரத்தினம். முனியனும் அவ்விடம் பெட்டி, படுக்கையை இறக்கிவைத்தான்.

ஆலமரத்தின் அருகில் சின்னஞ் சிறிய கோயிலொன்று. அதனை அடுத்திருந்தது ஒரு மண்டபம். அவற்றிற்குப் பின்னால் குடிசில் ஒன்று.

இவர்கள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு வருபவனைப்போல் கோயிலுக்குப்பின்னாலிருந்த குடிசிலிருந்து ஒருவன் மரத்தடிக்கு வந்தான்.

"இவர்தானுங்க கப்புராளை" என்று சபாரத்தினத்திடம் வந்தவனை அறிமுகம் செய்துவைத்தான் முனியன்.

"இந்தக் கோயிலுக்குக் கப்புராளையா? இது என்ன கோயில்?"

"பத்தினியம்மா கோயிலுங்க" என்றான் கப்புராளை.

இப்போதுதான் சபாரத்தினம் அந்தக் கோயிலை உற்று நோக்கி

ஞன். ஒளி மங்கிக்கொண்டிருக்கும் அந்த மாலை வேளையிலும் கோயிலின் பழைமைமெருகு சபாரத்தினத்தின் சிந்தையை இழுத்தது

"பக்கத்திலிருப்பதுதான் அம்பலம் — வருவோர், தங்குவதற்கு" என்று பின்னும் சொன்னான் கப்புராளை.

வருவோர் தங்குவதற்கு என்று கப்புராளை சொன்னதைப் பிடித்துக் கொண்டான் சபாரத்தினம்.

"அப்படியானல் இன்று நானும் தங்கலாமல்லவா?"

"ஓ, இருங்க. தாராளமா இருங்க. வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து தருகிறேன்" என்ருன் கப்புராளை.

"என்னத்துக்குங்க இங்கே போய் தங்கப்போறீங்க! இன்னும் கொஞ்சத் தூரந்தானே. தோட்டத்துக்கே போயிடலாமுங்க!" என்ருன் முனியன்.

"அங்கு வந்தாலும் பார்க்கவேண்டியவர்களைக் காலையில்தானே பார்க்க முடியும். இங்கேயே உறங்கி, ஓய்வெடுத்துக்கொண்டு காலையில் வந்து விடுகிறேனே!"

முனியன் ஒன்றும் பேசவில்லை. அவன் தனியனுகத் தோட்டத்தை நோக்கிச் சென்ருன்.

பொழுது நன்ருக இருட்டிவிட்டது. பெட்டியையும், படுக்கையையும் கப்புராளை எடுத்துப்போய் மண்டபத்தில் வைத்தான். வேறு யாரோ — குடிசிலிலிருந்து வந்து, மண்டபத்தைப் பெருக்கிவிட்டு, விளக்கேற்றி வைத்துவிட்டுப் போனுர்கள். அதன் பிறகு மரத்தடியிலிருந்த சபாரத்தினம் மண்டபத்துனுள் நுழைந்தான்.

"மாத்தயா, தேத்தண்ணி குடிக்கிறீங்களா?" என்று கேட்டுக் கொண்டு கப்புராளை உள்ளே வந்தான்.

மேலும் வாயிற் பக்கம் காலடியோசை கேட்டது. பார்வையை அந்தப் பக்கம் செலுத்தினுன் சபாரத்தினம். 'தாத்தா' என்று விளித்துக்கொண்டு பெண்ணெருத்தி அங்கு வந்தாள். அவள் கையில் பீங்கான் தட்டு ஒன்றை ஏந்தி வந்தாள். தட்டில் பலாச் சுளைகளும், செவ்வாழைப் பழங்களும் இருந்தன.

"மாத்தாயாவிடம் கொண்டுவந்து வை" என்ருன். கப்புராளை சிங்கள மொழியில்.

"இவள்தான் என் மகள் சோமாவதி" என்று கப்புராளை பின்னும் சொன்னது சபாரத்தினத்தின் செவியில் விழுந்ததோ, என்னவோ! அவனுக்குக் களைப்பும், தூக்கமும். உரையாடத் தெம்பு இல்லை.

மறுநாள் அதிகாலையிலேயே தோட்டத்திற்குக் கிளம்பிப் போனுன் சபாரத்தினம். திரும்பவும் பிற்பகல் அங்கு வந்தான்.

வெயில் நன்ருகக் காய்ந்து கொண்டிருந்தது. என்ருலும் அந்தப் பகுதியின் குளிர் நிலை வெயிலின் சூட்டைத் தணித்து இதமாக்கிக் கொண்டிருந்தது. முதல் நாள் இருளின் ஊடே காணமுடியாமற்போன அந்தப் பத்தினிக் கோயிலின் சுற்றுவட்டாரத்து எழிற்காட்சிகளை உற்று நோக்கிய வண்ணம் அங்கு அவன் வந்தபோது "வாங்க மாத்தயா!" என்ற இசைக் குரல் அவன் காதில் வந்து ஒலித்தது.

பத்தினிக் கோயிலின் எதிரிலிருந்த பலகைக் கல்லொன்றின்மீது அமர்ந்திருந்த சோமாவதி எழுந்து நின்ருள். முதல்நாள் இரவு நிழற் சரிவில் கண்ட தோற்றம் இத்துணை எழிற் சிறப்பும், இளமைக் கொழிப்பும் நிறைந்ததாக இருக்குமென்று சபாரத்தினம் எதிர்பார்க்கவில்லை. என்ன பேசுவதென்று தோன்ருமல் ஒரு கணம் திகைத்தான் அவன்.

"அப்பா வெளியிற் போயிருக்கிருர். சீக்கிரம் வந்துவிடுவார்" என்ருள் சோமாவதி.

"பெட்டி, படுக்கையை இங்கிருந்து எடுத்துப்போக வேண்டும். அதற்குத்தான் வந்தேன்" என்று தான் வந்த காரணத்தைச் சொல்லிவிட்டு மரத்தடிக் கல்லின் மீது அமரப்போனுன் அவன்.

"இங்கே அம்பலத்தில் வந்து உட்காருங்கள்" என்று கூறிய சோமாவதி அம்பலத்தை நோக்கிச் சென்ருள். கதவைத் திறந்து, உள்ளே இருந்து நாற்காலியொன்று கொண்டு வந்து தாழ்வாரத்திற் போட்டாள். "மாததயா, தேத்தண்ணி குடிக்கிறீங்களா?" என்று அவள் கேட்டுவிட்டு, அவன் பதிலுக்காகக் காத்திராமல் குடிசிலுக்குள் ஓடினுள்.

முதல்நாள் அங்கு பருகிய தேநீர் சபாரத்தினத்தின் நினைவுக்கு வந்தது. அந்தத் தேநீர் பால் சேர்க்கப் படாத வெறும் தேநீர்தான். என்ருலும் களைப்பு மிகுந்திருந்த அந்த வேளையில் அது அமுதம்போல் இனித்தது. அதே தேநீர்தான் இப்போதும் இவள் கொண்டுவருவாள்' என்று எதிர்பார்த்தான் அவன்.

இரண்டே நிமிடங்களில் சோமாவதி திரும்பி வந்தாள் கையில் தேநீர்க் கோப்பையுடன்.

'அட, இவ்வளவு சீக்கிரமா'என்று தனக்குள் கூறிக்கொண்டு, தேநீர்க் கோப்பையை வாங்கினுன் அவன்.

இப்போது பால் கலந்த தேநீர். அதைச் சுவைத்துச் சுவைத்துப் பருகினுன் அவன். அடிக்கொரு முறை சோமாவதியையும் ஏறிட்டுப் பார்த்துக்கொண்டான். சுவைப்பது தேநீரையா அல்லது எதிரில் நிற்கும் எழில் தோற்றத்தையா என்று புலப்படாத நிலையில் இரண்டையும் சேர்த்துச் சுவைத்துக்கொண்டிருந்தான் அவன்.

அவளிடம் மேற்கொண்டு ஏதாவது பேசவேண்டும் என்று அவன் விழைந்தான். என்ன பேசுவதென்று தோன்றவில்லை. ஒருவரையொருவர் சும்மா மாறிமாறிப் பார்த்துக்கொண்டனர். அந்த நிலை பெரிய சங்கடமாக இருந்தது போலும் சோமாவதிக்கு. காலிக் கோப்பையை எடுத்துக்கொண்டு குடிசிலுக்குச் சென்ருள் அவள். போனவள் அங்கேயே தங்கிவிடவில்லை. அவள் உள்ளம் அன்றுபோல் என்றுமே நிலைகொள்ளாமல் தடுமாறியது கிடையாது. திரும்பி வந்தாள்.

அதற்குள் அவளிடம் என்ன பேசவேண்டும் என்று நினைத்து வைத்துக் கொண்டுவிட்டான் போலும் சபாரத்தினம்.

"நீ என்ன படித்திருக்கிருய்?"

"சிங்களம் எட்டாம் வகுப்புவரை படித்திருக்கிறேன். தமிழும் படித்திருக்கிறேன்"

அவன் எதிர்பார்க்கவில்லை சோமாவதி தமிழ்கூடப் படித்திருப்பாள் என்று. மேலும் ஏதேதோ கேட்கவேண்டுமென்று அவன் எண்ணினுன். அதற்குள் கப்புராளை அங்கு வந்துவிட்டான். பேச்சு நின்றது. கப்புராளையிடம் சொல்லிக் கொண்டு கிளம்புதற்கு எழுந்தான் சபாரத்தினம்.

"நாளைக்குத்தானே வேலை. இன்று போய் அங்கே என்னசெய்யப் போகின்றீர்கள்? இன்றிரவும் இங்கே தங்கிவிடுங்கள்" என்று கப்புராளை சொன்னபோது, அரை மனத்தோடு அங்கே தங்கப்போகிறவனுக வெளியில் காட்டிக்கொண்டு முழுமன உவகையோடு அங்கே குந்திக் கொண்டான் அவன்.

சோமாவதி துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடினாள்—அவனுக்காக இராச்சாப்பாடு தயாரிக்க.

ஒருபுறம் தேயிலைக்காடும், இரப்பர்க்காடும், பிறிதொருபுறம் பல்வேறு வகைப்பட்ட மரங்களையுடைய இயற்கைக் காடும் சூழ்ந்த அந்த மலைப்பகுதி இப்போது சபாரத்தினத்திற்குக் காடாகத் தோன்றவேயில்லை. அது குளிர் பூஞ்சோலை. இனிமை கமழ எழில் பூததுக்கிடக்கும் இன்பத் தோப்பு.

நாட்கள் போவதே தெரியவில்லை. ஊரையும், உற்ற பெற்ற சுற்றத்தாரையும்கூடச் சபாரத்தினம் மறந்துவிடுவான்போல் இன்பலாகிரியில் மூழ்கிக்கிடந்தான்.

•

பத்தினிக் கோயிலுக்குச் சற்றுத் தொலைவிலே ஒரு சோளக்கொல்லை. அங்கே பரண்மீது அமர்ந்து சோமாவதி காவல் காத்துக்கொண்டிருந்தாள். அன்று ஞாயிற்றுக்கிழமை.

கொல்லையைச் சுற்றிலும் செழித்து வளர்ந்திருந்தது கத்திப்புல். அந்தக் காட்டுக்குள்ளிருந்து சலசலப்புக்கேட்டது. தொலைவில் யாரோ முயல்வேட்டைக்காரர் நாய்களை ஏவிவிடும் ஒலி வந்தது. சோமாவதி அவற்றைக் கவனிக்கவில்லை. அவள் நோக்கமும், எண்ணமும் தோட்டத்திலிருந்து சபாரத்தினம் வருகின்றவழிமீது படிந்துகிடந்தன.

திடும் என்று இரண்டு மூன்று பேர் ஓடிவரும் ஒலிகேட்டது. காட்டுப்பக்கமிருந்து, வேலியைத் தாண்டிக் குதித்துக் கொல்லைக்குள் வந்தார்கள் அவர்கள். அவர்களுக்கு முன்னால் நாய்களிரண்டும் ஓடிவந்தன.

“அதோ, அதோ! முயல் ஓடுகிறது!” என்று அவர்கள் அடிக்கொருமுறை கூச்சல் கிளப்பிக்கொண்டிருந்தார்கள்.

சோமாவதி பரண்மீதிருந்து சட்டென்று கீழே குதித்தாள்.

“ஏ, ஏ! கொல்லைக்குள்ளே நுழையாதிங்க!” என்று குரல்கொடுத்துக்கொண்டு அவர்கள் நிற்குமிடம் சென்றாள்.

பயிரை மிதித்துக்கொண்டு மேலும் நடக்கமுனைந்தவர்கள் அப்படியே தயங்கி நின்றார்கள். வேலியைத் தாண்டி அப்பால் போவதைத் தவிர வேறொன்றும் அவர்களுக்குப் புலப்படவில்லை.

“உம், உம், கலையுங்கள். ஏன் நின்றுவிட்டீர்கள்?” என்று அவ்வேலை வேலிக்கு அப்பாலிருந்து வேறொரு குரல் வந்தது சிங்கள மொழியில்.

அங்கே வேட்டையுடையுடன், கையில் துப்பாக்கியோடு ஒருவன் நின்றுகொண்டிருந்தான்.

“இங்கே கொல்லைக்குள் நுழையக்கூடாது!” என்றாள் சோமாவதி.

“கொல்லைக்குள் ஒன்றும் திருடவரவில்லை. முயலைக் கலைக்க வந்தோம்!” என்றான் வேட்டைக்காரன். அவன் குரல் ஏளனமாக ஒலித்தது.

பயிரை மிதித்துச் சிதைப்பதை விடத் திருடுவது மேலாயிற்றே!” என்று சோமாவதி பட்டென்று பதிலிறுத்தாள்.

“திமிராகப் பேசுகின்றாயே!” என்றான் அந்த வேட்டைக்காரன்.

“வார்த்தை வேண்டாம், உள்ளே யாரும் நுழையக்கூடாது. அவ்வளவுதான்” என்று சோமாவதி கூறிவிட்டுத் திரும்பினாள்.

“நுழைந்தால் என்ன செய்வாயாம்!” என்று கேலிக்குரலிற் கூறிவிட்டு “ஏ, போய்க்கலையுங்கள்!” என்றான் முன்னால் நின்றவர்களைப் பார்த்து வேட்டைக்காரன்.

சோமாவதி சட்டென்று திரும்பி முறைத்துப்பார்த்தாள்.

ஆட்கள் நகரவில்லை. நட்டு வைத்த மரம்போல் நின்றார்கள். பயிரை மிதிக்துத் துவைப்பது அவர்களுக்கும் உடன்பாடு இல்லை.

“நீங்கள் போகமாட்டீர்களா? இதோ, நான் போகிறேன்!”

வேலியைத் தாண்டிக் குதித்து உள்ளே வந்து பயிரை மிதித்தபடி இரண்டடி எடுத்துவைத்தான் வேட்டைக்காரன். அவ்வளவுதான் ‘பளார்’ என்று ஒரு ஒலி கிளம்பியது. வேட்டைக்காரன் கன்னத்தைப் பிடித்துக்கொண்டான்.

அந்தப் ‘பளார்’ வேட்டைக்காரன் எதிர்பார்த்ததில்லை. சோமாவதி அதை நினைக்கவேயில்லை. சபாரத்தினம் அங்கே எதிரில் நின்றுகொண்டிருந்தான்.

வெறிபிடித்தவனானான் வேட்டைக்காரன். துப்பாக்கிக்கட்டையை ஓங்கிக்கொண்டு சபாரத்தினத்தை நெருங்கினான். அவன் அதைத் தடுத்தான். இருவரும் மோதிக்கொண்டார்கள். உருண்டார்கள். புரண்டார்கள். சோமாவதி திகில் பிடித்து நின்றாள்.

கடைசியாக வேட்டைக்காரன் பட்டது போதுமென்று, வேலியைத் தாண்டிக்கொண்டு போயே போய் விட்டான்.

அந்த வேட்டைக்காரன் வேறு யாருமல்ல. சபாரத்தினம் பணியாற்றும் தோட்டத்தில், ஒரு பிரிவில் தலைமையாளனாக அலுவல் பார்ப்பவன்—அபயசேகரா என்ற சிங்களவன்.

தான் ஆத்திரத்தோடு அவசரப்பட்டுவிட்டதாகச் சபாரத்தினம் பின்னர் நினைத்தான்.

மறுநாள் தோட்டத்துத் தலைமையாளரிடம் பெரியதொரு குற்றச்சாட்டைக் கொண்டுபோனான் அபயசேகரா. அந்தக் குற்றச்சாட்டு:

‘அபயசேகரா முதல் நாள் வேட்டைக்குப் போனான். வேட்டை விலங்கைத் துரத்திக்கொண்டு கப்புராளையின் கொல்லைப்பக்கம் ஓடினான். அப்போது கொல்லையிலிருந்து கூக்குரல் கேட்டது — பெண்ணொருத்தியின் கூக்குரல். கொல்லைக்குள் சென்றுபார்த்தான் அபயசேகரா. அங்கே கப்புராளையின் பெண் சோமாவதியிடம் தகாத முறையில் வன்முறை காட்டிக்கொண்டிருந்தான் சபாரத்தினம். தடுக்கப்போன அபயசேகராவையும் தாக்கினான் அவன். அதற்குச் சான்று உடன் வந்த இருவர் மட்டுமல்ல; — கப்புராளையுங்கூட.

ஆமாம், கப்புராளை அபயசேகராவிடம் அடங்கி, இணங்கிப்போகத்தான் வேண்டியிருந்தது. ஓரினத்தவன் என்பதற்காக மட்டுமல்ல, அருகிலிருக்கும்தோட்டத்தின் அதிகாரி என்பதற்காகவும்.

கப்புராளையின் உள்ளம் உருகாமலில்லை. என்றாலும் அந்த ஏழையால் என்ன செய்யமுடியும்—இனத்தைப் பகைத்துக்கொண்டோ, அதிகாரத்தை எதிர்த்துக்கொண்டோ?

அந்தப் பத்தினிக்கோயில் வழியாகத்தான் தன் சொந்த ஊருக்குத் திரும்பிப்போனான் சபாரத்தினம்—தடுமாற்ற நடைபோட்டு. அப்பப்ப, அந்தக் கோயிலை அவன் நெருங்கியபோது, அதைக் கடந்துகொண்டிருந்தபோது, அதைத் தாண்டிவிட்டபோது அவன் உள்ளம் பட்டபாடு, அடைந்த அலதி, குமைந்து நின்ற நிலை இயம்பும் தரத்தனவா! அது அவன் முதல் அனுபவம். இனியும் அப்படியொரு அனுபவம் அவனுக்கு வரமுடியாது. வரவேண்டாம்!

★

# விருந்து

—[இரா. மாணிக்கம்]—

"அங்கு எதற்காக அத்தனை கார்கள் நின்றுகொண்டு இருக்கின்றன? கார் எக்ஸிபிஷனு!"

இல்லை! இல்லை! நாராயணபிள்ளை தெரியாது? அவர்தானய்யா கோடித் தெருவிலே எண்ணெய் மண்டி வைத்திருக்கிறாரே, அவருடைய 'பங்களா' இன்று திறப்பு விழா! அதற்குத்தான் ஊரிலுள்ள அவ்வளவு கார்களும் படையெடுத்திருக்கின்றன. அதோடு 'ஸ்பெஷல்' விருந்தாம்; நமக்கல்ல; பெரிய மனிதர்களுக்கு.

நமக்கெல்லாம் விருந்துவைக்க, ஏழெட்டாண்டுகளுக்கு முன் டால்டா டின்னில் கடலை எண்ணெயை எடுத்துக்கொண்டு வீதி வீதியாய் சுற்றியலைந்து விற்ற எண்ணெய்க்கார நாராயணப்பிள்ளையாகவா இருக்கிறார்? ஊம்...... இப்போது அவர் இலட்சாதிபதி ஆயிற்றே! தன் அந்தஸ்துக்கு ஏற்றபடிதானே வாழ வேண்டும்!

ஏன் மலைக்கிறீர்! இலட்சாதிபதி என்றேனே, அதற்கா? அந்தமான்மியத்தை விரிவாகக் கூறவேண்டுமானால், பிள்ளையவர்களுக்காக ஒரு காவியமே எழுதவேண்டி வரும். என்றாலும் அவர் வளர்ந்த விதத்தைக் குறிப்பாக ஒன்றிரண்டு சொற்களால் சொல்லிவிடுகிறேன்.

பிள்ளையவர்கள் இருக்கிறாரே, அவர் கையில் வேர்க்கடலை எண்ணெய் எள்ளெண்ணெயாக, எள்ளெண்ணெய் நெய்யாக உருமாறும். இன்னும் இருக்கப்பட்ட எண்ணெய் வகையருக்கள்கூடத் தாரதம்மியம் பார்த்து அவரால் கலப்படம் செய்யப்படும். இந்த வித்தையில் ஒப்பாருமிக்காருமின்றிக் கொடி கட்டித் தொழில்புரிந்து வந்த பிள்ளையவர்களின் கையில் எப்படியோ இரயில்வே 'காண்டிராக்ட்' ஒன்று கர்ப்பகதருப்போல் சிக்கிக்கொண்டது. அவ்வளவுதான்! அதை உடும்புப்பிடியாகப் பற்றிக்கொண்டு தம் 'கைவரிசை' முழுவதையும் காட்டலானார்.

பாருங்களேன்! அரசாங்கம்கூட இவருடைய அப்பழுக்கற்ற நாணயத்திற்காக, பாராட்டிதழ் வாசித்துக் கொடுத்ததோடு, சிறைச்சாலைகளுக்கு எண்ணெய் 'சப்ளை' செய்யும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டது. பிறகென்ன? வெறும் நாராயணப்பிள்ளை 'இலட் சாதி'பதி என்ற பட்டத்தைப் பெற்றார்.

ஆனால், ஏமாற்று வேலைகளை ஏனோ அவரால் தொடர்ந்து செய்ய மனம் இடந்தரவில்லை இதற்கு அவரிடம் குற்றுயிராய் ஒட்டிக்கொண்டிருந்த மனசாட்சி மாத்திரமா காரணம்? இல்லை! தன் கலப்படத் தொழிலை யாராவது கண்டுவிட்டால் இத்தனை நாள் பாடுபட்டுப் பெற்ற உயர்நிலை என்ன ஆகும் என்ற அச்சமும்தான்! எனவே, வாடிக்கைத் தொழிலுக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, பூர்வபாவ வினைகளுக்கெல்லாம் கழுவாய் தேடும் முறையிலே வீட்டோடு எண்ணெய் மண்டி ஒன்று வைத்துக்கொண்டு தொழிலை நாணயமாகச் செய்துவருகிறார். அன்றியும் இப்பொழுது பிள்ளையவர்கள் நாலு பேரோடு பழகுவது, நாட்டு நடப்புகளை விவாதிப்பதுயான புதிய வழிகளை மேற்கொள்வதில் அதிக ஆசை கொண்டுள்ளதாகக் கேள்வி!... போகட்டும்! விருந்துக்கு வருவோம்.

பிள்ளையவர்களா இப்படி இருபத்தைந்து வயது வாலிபனை ஓடியாடி வேலை செய்கிறார்? சரிவிகிதமின்றி மிதப்போடு வளர்ந்துவிட்ட அவருடைய உடம்பு ஆடாமல் அலுங்காமல் இருப்பதுதானே வழக்கம்! இன்று அதற்கு மாறாக துருத்தியிலிருந்து வரும் காற்றுப்போல் மேல்மூச்சு வாங்கக் கவாத்து அல்லவா பழகுகிறார்.

நலுங்காத அவர் உடல் நலுங்குகிறதென்றால் காரணமில்லாமலா இருக்கும்? இல்லையென்றால் நூற்றெட்டுக் காய்கறிகளைச் சமைக்கச் செய்திருப்பாரா? பத்துவகையான சோற்றையும், பல்வேறு வகைத் தித்திப்புகளையும் சுத்தமான நெய்யாலேயே பண்ணும்படி பணித்திருப்பாரா? பணத்தையும் பொருட்படுத்தாமல் உயர்ந்த பழவகைகளைத்தான் வாங்கியிருப்பாரா? செய்யவே மாட்டார் பிள்ளையவர்கள்.

எல்லோருந்தான் வரவேற்கிறார்கள், வந்தவர்களின் தராதரத்தைப் பார்க்காமல்! பிள்ளையவர்களின் வரவேற்போ அலாதியான தனித்தன்மைகொண்டது. அவர்களெல்லாம் கற்றுக்கொள்ளவேண்டியது! "அழைக்கப்பட்டவர்கள்தான் வருகிறார்களா" என்று வாயிலில் நின்றுகொண்டு தன் குரூர விழிகளால் சோதனையிட்டல்லவா, வந்தவரை உபசரித்துப் பிறகு உள்ளே அழைத்துச் செல்கிறார்! செலாவணி அற்றதுகளையெல்லாம் உள்ளே விட்டுவிட்டு முக்கிய பிரமுகர்களின் பட்டியலை அதன் புனிதத்தன்மையை மாசுபடுத்தவா எண்ணுவார்! அனாமதேயங்களை வாசற்படியிலேயே வழியனுப்பிவிட்டு, வரவேற்பு 'வடிகட்டலை' வெற்றியோடு முடித்தார்.

பிரமுகர்கள் என்ற பட்டயம் தாங்கிய அனைவரும் வருகை தந்திருப்பதைஎண்ணிப், பிள்ளையவர்கள் ஆனந்த பரவசத்தில் மிதந்தார். ஒவ்வொருவரும் சிறிது நேரம் அவரோடு அளவளாவிக்கொண்டார்கள். தன்னுடைய கீர்த்தி பிரதாபங்கள் அவர்களுடைய நாவிலெல்லாம் தவழ்ந்து வருவதை நினைந்து, நாராயணப்பிள்ளைக்குஉண்மையாக கர்வம் கொழுந்துவிட்டது. எல்லோரையும் பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு தயாராக, தஞ்சாவூர் தலைவாழையிலைகளில் பல வண்ணங்களில் பலகார பட்சணங்கள் கொலுவீற்றிருந்தன. அனைவரையும் உட்காரும்படி கையமர்த்திவிட்டுத் தானும் கலெக்டர் பக்கத்தில் கனகம்பீரமாக உட்கார்ந்து கொண்டார் உண்ணுவதற்கு.

பிள்ளையவர்களுக்கு சாப்பாட்டின் மீது பிரியமே இல்லை. ஏதோ மற்றவர்களுக்காகக் கொஞ்சநேரம் உணவோடு போராடினர். அவர் உள்ளம் எதையோ அறியத் தவியாய் தவித்தது.

ஆமாம்! பிள்ளையவர்கள் தன்னுடைய விருந்தின் பெருமையை அங்குள்ளவர்களிடம் கேட்டுக் களிப்பில் மூழ்கிட விரும்பினர். இல்லை, துடித்தார், முதலில் வழக்கமான குழைவோடு கலெக்டரிடம் "ஐயாவுக்குத்திருப்திதானே? ஏதோ தனி சிரத்தை எடுத்துக்கொண்டு உங்களைப் போன்றவர்களை மகிழ்விக்க விரும்பினேன்... என்று தன்னுடைய ஆவலை அரைகுறையாகத் திக்கித் திணறி வெளிப்படுத்திவிட்டு எந்தவித அனுமானிப்பின்றிக் குழப்பச் சுழிப்போடு கலெக்டரை நோக்கினர்.

மென்றுகொண்டிருந்த உணவை உள்ளுக்குத் தள்ளியவாறு கலெக்டர் அவர்கள் "என்ன பிள்ளை மார்க்கெட்டையே எங்கள் இலையிலே கொண்டுவந்து வச்சிட்டு இருக்கிறீரே! 'கன்டிரீஸ்ஸைக' சாப்பிடக்கூடியதெல்லாம் குப்பையா கொண்டுவந்து நிரப்பிட்டா எப்படிச் சுவைத்துச் சாப்பிட முடியும்? 'சிம்பிளா' நான்கைந்து இங்கிலீஷ் காய்க்கறிகளைச் சேர்த்துக்கிட்டிருந்தால் எவ்வளவு நல்லா இருந்திருக்கும்? இது கிடக்கட்டும். 'ஆப்டரால்' ஒரு பிஸ்கட் துண்டு வேண்டாம்? பிள்ளை! நீங்கள் ரொம்ப கர்னாடகப் பேர்வழி போலிருக்கிறது!" என்று கூறிவிட்டு கோரமாக வாயைப் பிளந்தார்.

கிஞ்சித்தும்எதிர்பார்க்காதஇந்தத் தாக்குதலால் பிள்ளையவர்களின் உள்ளம் பெருத்த பாதிப்புக்குள்ளாகிவிட்டது. கலெக்டருடைய வாயிலிருந்து வரும் பாராட்டுரைகளால "தாம் புகழ்ச்சிப் பரகதிக்கே சென்றுவிடுவோம்" என்று எண்ணமிட்டு இறுமாந்திருந்த பிள்ளையவர்கள் கணத்தில் கசந்தும், கைத்தும், நொடிந்தும், இடிந்தும், குலைந்தும் போனர். அவரது மனம், கண்ணுக்குத் தெரியாத வெறுமை வெளியில் தனக்கு நேரிட்டதை எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தது.

அப்பொழுது எதிரில் அமர்ந்துகொண்டிருந்த உள்ளூர் நீதிபதி, "நாராயண பிள்ளை! ஏன் சாப்பிடாமல் எங்கேயோ கவனிச்சிட்டிருக்கிங்களே" என்று கேட்ட பிறகுதான் சூழ்நிலையை மறந்து கிடந்த பிள்ளை, நினைவுக்கு இழுக்கப்பட்டவராய் "ஒண்ணுமில்லிங்க" என்ற அசட்டு வார்த்தையால் சமாளித்துக்கொண்டு மீண்டும் உணவில் கையை வைத்தார். என்றாலும் அவருக்குச் சாப்பாட்டில் நாட்டமே இல்லை.

நீதிபதியவர்களே, மறுபடியும் முகத்தில் அலட்சியம் புலர்ந்திடப் பிள்ளையவர்களைப் பார்த்து "என்னையா நீரென்ன சைவமோ? ஒரு துண்டு கறியைக்கூட வைக்காமல் விருந்தையே மருந்தாக்கி விட்டீரே! 'அப்டுடேட்' விருந்திற்கெல்லாம் மாமிசத்திற்குத்தான் முக்கியத்துவம். இது தெரியாமல் செடிகொடிகளையும, சர்க்கரையையும் இலையில் நிரப்பிவிட்டிருக்கிறீர். என்னத்திற்கு உதவும்?" என்று குற்றப்பத்திரிகை வாசித்தார்.

இந்தக் கருத்தை ஒட்டியும், வெட்டியும் பலரும் குரல் கொடுத்தனர்.

சுத்த சைவப் பழமான பிள்ளையவர்கள் மாமிசத்தைப் பற்றிய விவாத அரங்கில் கலந்துகொள்ளும் படியான இரங்கத்தக்க நிலைக்காக தன்னையே நொந்துகொண்டார். காதைப் பொத்திக்கொண்டு 'சிவசிவா' என்று மௌனம் பண்ண வேண்டும்போலிருந்தது பிள்ளையவர்களுக்கு. ஆனல் அவ்வளவு பேர் முன்னிலையில் தான் காதை மூடிக்கொண்டால் அவர்களெல்லாம் என்ன நினைப்பார்கள் என்ற அச்சுதலால் வறட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு, வேறு வழியின்றிச் சகித்துக்கொண்டிருந்தார். நீதிபதியின் சொற்கள் ஒவ்வொன்றும் நெரிஞ்சில் முள்ளாகக் குத்தியது பிள்ளையவர்களை.

தன்னுடைய வாடிக்கைக்காரர்களை மிரட்டி மீன்பிடிப்பதுபோல் நீதிபதியையும் கடுமையான கிராமிய மொழியால் மடக்கி வாய் பொத்த வைக்கவேண்டுமென்றுதான் ஆத்திரப்பட்டார் பிள்ளை. ஆனல் மெத்தப் படித்தவரோடு போய், வார்த்தையாடுவதா என்ற அச்ச உணர்வு நெஞ்சை அடைக்க எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருந்தார் ஆற்றாமையோடு.

இதோடு விட்டார்களா விருந்தினர்கள் பிள்ளையவர்களை! மேலும் தங்களுடைய எண்ணங்களை விரிக்கலாயினர்.

"பிள்ளை! விருந்துக்கு பிரதானமாயிருப்பதே சீமைச் சரக்குத்தான்! அதையே துளிகூடக் காட்டாமல் போனல் எப்படி ஐயா இது விருந்தாகும்?"

"அண்ணாச்சி! நம்ம அபரஞ்சி குட்டியில்லே; அதை பிடிச்சிட்டு வந்து நமக்கு முன்னே நாட்டியம் ஆடவச்சிருந்தா இப்பொழுது எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? விருந்தையே 'சப்'ன்னு பண்ணிட்டிங்களே!"

இவைபோன்று. பெரியவர்கள் கூறத்தகாதவைகளையெல்லாம் திருவாய் மலர்ந்தருள, அவைகளெல்லாம் பிள்ளையவர்களை குலைந்துலையச் செய்தன. இனியும் அங்கு உட்கார்ந்திருக்க அவரால் சாத்தியப்படவில்லை. உக்கிரமாக ஏதோ ஒன்று அவர் உள்ளத்தை நெருடி வேதனை கொள்ளச் செய்தது. "எல்லோரும் சாப்பிட்டுக்கொண்டிருங்கள். வெளியில் என்னவோ சத்தம் கேட்கிறது. பார்த்திட்டு வர்றேன்" என்று சொல்லிவிட்டு அவர்களுடைய படாடோபப் பிடியிலிருந்து விடுபட்டவராய் வெளியில் வந்தார். அவரது அடிவயிற்றிலிருந்து 'அப்பாடா' என்று பெருமூச்சொன்று சண்டமாருதமாய் வெளிவந்தது.

வெளி வாயிலை நோக்கிவந்த பிள்ளையவர்கள் மெய்யாகவே வெளியிலிருந்துசத்தம்வருவதைக்கேட்டுச் சுட்டெரிக்கும் காந்தலோடு விரைந்தார். அங்கே அவர் கண்ட காட்சி அவரை மேலும் கோபங்கொள்ளச் செய்தது.

அங்கிங்கெனதபடி எங்குமாய் வியாபித்துத்தங்கள் அவலப் பிழைப்பைப் பறைசாற்றிக் கொண்டுத் திரியும் இலட்சோபலட்சம் பிச்சைக்காரர்களின் சிறு துளி — அதாவது ஒரு பத்துப்பன்னிரண்டு பேர் வாயிற்படியில் நின்றுகொண்டு தங்களுடைய தகரக் குவளையின் மூலம் தங்களின் இசைச் சாகித்தியத்தைக் காட்டிக்கொண்டிருந்தார்கள்.

தன் மனதில் குவிந்துகிடக்கும் கோபத்தைக் கொட்டித் தீர்ப்பதற்கு வகையான ஆட்கள் வசமாகக் கிடைத்து விட்டார்கள் என்று நினைத்துக் கொண்டாரோ என்னவோ, பிள்ளையவர்கள், காய்ச்சிய எண்ணெயைப் பீச்சுவதுபோல் முடிந்த மட்டும் கீழ்த்தரமான சொற்களை அவர்கள்மீது வீசினர்.

"ஏ அழுகல் பிண்டங்களா! எதுக்கு இங்கே நின்னுக்கிட்டுத் தொல்லை பண்றீங்க? இது என்ன சத்திரம் சாவடின்னு நினைச்சிட்டிங்களா? இங்கிருந்து போறிங்களா,

இல்லே சுடுதண்ணீரைக் கொட்டிப் போகவைக்கட்டுமா'' என்று வேர்த்து வியர்க்க அவர்களுக்கு விருந்து வைத்தார்.

அப்பொழுது அவர்களில் ஒருவன் மிக்க வியப்புடன் ''சாமி! அப்படியெல்லாம் செய்துபுடாதீங்க. நீங்க சாப்பாடு போடாட்டிப்போனாலும் போகுது. எச்சில் இலைகளையாவது எங்களிடம் போடுங்க தயவுபண்ணி. உங்களுக்குப் புண்ணியமுண்டு. நாங்க அதையாவது பார்த்திட்டுப் போறோம்'' என்று கொஞ்சலோடு விண்ணப்பித்துக்கொண்டான்.

''எச்சில் இலைகளையாவது''...... என்ற கேவலமிக்க வேண்டுதலைக் கேட்டு வயிறு குமட்ட ''நாய்ப் பிறவிகள்'' என்று அர்ச்சித்தலுக்கு முத்தாய்ப்பு வைத்துவிட்டு உள்ளே சென்றுவிட்டார் பிள்ளையவர்கள். நலிந்தவர்களை — அவர்களுடைய வறுமைப்பிழைப்பை கண்ணெடுத்துப் பார்க்க விரும்பாத திருக் கூட்டத்தின் அங்கந்தானே பிள்ளையும்! அவரால் வேறென்ன செய்ய முடியும்? பிறன்நோய் தன் நோய் போல் எண்ணித் தக்க பரிகாரங்களைச் செய்து களைந்திட்ட சான்றோர் களின் உறைவிடந்தான், பிள்ளையவர்களையும், அவரைப் போன்ற எண்ணற்றவர்களையும் உரமிட்டு வளர்க்கிறது. இந்தப் போக்கு இப்படியே துரிதமாக வளருமானால்......

அதை இங்கு கிளறுவானேன்? வாருங்கள் உள்ளேபோவோம்.

ஒருவாறு அனைவரும் சாப்பிட்டு முடித்தார்கள்- இல்லை எல்லாவற்றையும் எச்சில் படுத்திவிட்டு எழுந்தார்கள். (இன்றைய நாகரிகத்தில் இந்தமுறை தலையாயது என்று கொள்க.)

ஆரம்பத்திலிருந்த உற்சாக ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும் பிள்ளையவர்களைவிட்டுப் போய்விட்டன. என்றாலும் வலிந்து மகிழ்ச்சியை முகத்தில் ஏற்றி எல்லோருக்கும் தாம்பூலாதிகள் வழங்கி எப்படியோ வழியனுப்பும் உபசாரத்தை ஒப்பேற்றி விட்டார்,

அடுத்து, கவனிக்க வேண்டியவைகள் எவையுமே பிள்ளையவர் களின் நெஞ்சில் காலூன்ற முடியவில்லை. அவ்வளவு குழப்பமாக இருந்தது. வெளித் தாழ்வாரத்திலிருந்த நாற்காலியில் உள்ளங்கைகள் இரண்டையும் தலைக்கு முட்டுக்கொடுத்துக்கொண்டு உட் கார்ந்துவிட்டார். அவருடைய மனச் சதுக்கத்தில் மூளியாகிவிட்ட ஆவலும், பயனற்ற பணவிரயம் என்ற சஞ்சலமும், இன்னும் இனங்காண முடியாத எத்தனையோ உணர்வுகளும் அணிவகுத்து களிநடம் புரிந்தன. கிட்டாததற்காக ஒன்றின் மீது வெறுப்புக் கொள்கிறவனைப் போல் குமைந்து, எதையுமே நினைக்க முடியாமல் அசதியுற்றும், அடுத்த விநாடி எல்லாவற்றையும் நினைத்துக்கொண்டு ஏங்கிக் குழம்புவதுமாக இருந்தார் பிள்ளையவர்கள்.

இப்படி எவ்வளவு நேரம் உட் கார்ந்து கிடந்தாரோ! ''சாமி!......'' என்ற சத்தத்தைக் கேட்டுத்தான் மனமுட்டத்திலிருந்து விலகி வெளி வந்தவராய்க் குரல் வந்த பக்கம் பார்வையை ஓட்டினார்.

வீதியில் பிச்சைக்காரர்களின் கூட்டம் அணிவகுத்து நின்று கொண்டிருந்தது. அவர்களுடைய முகங்களிலே வசந்தத்தின் பொலிவு திகழ்ந்தது. உள்நோக்கி உயிர்ப்புக் குன்றிக்கிடந்த அவர்களுடைய விழிகளெல்லாம் மலர்ப்புற்று வயிற்றின் நிறைவை—அதற்கும்மேலான உள்ளத்தின்நிறைவை நன்றியோடு வழியவிட்டன.

எல்லோருமாக பிள்ளையவர்களைப் பார்த்து ''சாமி! எங்க காலத்தில் இதுமாதிரி சாப்பாட்டை உண்டதில்லை. நீங்க நல்லபடியா வாழணும். உங்களை எங்கள் உயிர் இருக்கிற வரை எங்குபோனாலும் மறக்கமாட்டோம்'' என்று மனதார வாழ்த்தினார்கள். அந்தப் போற்றுதலிலே கபடமில்லை. தூய்மையான இதயங்களின் அன்புப் பொலிவு அதன் குளிர்ச்சி எல்லாமே தெரிந்தது.

பிள்ளையவர்கள் அவர்களுடைய பேச்சிலே ஒருவிதத் தளிர்ப்புக் கொண்டார். கனத்துக் கருகிக் கொண்டிருந்த அவருள்ளம் கொஞ்சங்கொஞ்சமாய் இலேசாகிக் கொண்டேவந்தது. சற்றுமுன் போன, கனதனவான்களை இவர்களோடு ஒப்பிட்டுப்பார்த்தார். 'அந்தஸ்து' என்பதைத் தவிர அவர்களிடம் வேறெதையும் இவரால் காண முடியவில்லை. இவர்களிடம் ஏழ்மையைத்தவிர, மற்ற எல்லாவற்றையும் அவர்மனம் கண்டது.

மனிதத்தன்மைக்குக் கல்லறை கட்டும் அந்தஸ்தின்மீதா இத்தனை நாள்மோகங்கொண்டிருந்தேன்! சே! பளியேப்பக்காரனுக்கு விருந்து வைப்பதா அந்தஸ்து? அவனுடைய புகழ்ச்சிபேத்தலுக்கு பல்லிளித்து மயங்குவதா பேரின்பம்? இனியும் இந்த நியாயமற்ற படுகுழியில் விழமாட்டேன்.

இந்த ஞானோதயத்தால் நாராயணம் பிள்ளையின் சூடேறிக்கிடந்த மனப்படுகையில் 'சமத்துவம்' பெருகிச்சென்றது, இதனால் புத்தெழுச்சிகொண்டார். ஆமாம்! முற்றிலும் புதிய மனிதராய்ப் புடம் போட்டு எடுக்கப்பட்டார்.

பிச்சைக்காரர்கள் போவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தார்கள். பிள்ளையவர்களின் இதயத்தில் கொடிவிட்ட புத்துணர்வு அவர்களை அழைக்கும்படி உந்தியது. வரும்படி சைகை காட்டிவிட்டு உள்ளே சென்ற பிள்ளை வேலையாட்களிடம் மீதியிருந்த பலகாரங்களைக்கொண்டு வரச்சொல்லிவிட்டு வெளியில் வந்தார்.

''எல்லோரும் உட்காருங்கள்; சாப்பிட்டுப்போவீர்கள்.''

பிள்ளையவர்கள் கருணைக் கடலானார்.

ஆனால், பிச்சைக்காரர்கள் ஒரே குரலில் ''எங்க வயிறெல்லாம் நிறைஞ்சிகிடக்கு சாமி'' என்றார்கள்.

''அப்படியானால் எடுத்துக் கொண்டுபோங்கள்'' என்று அவர்களுடைய டபராக்களையெல்லாம் சுத்த நெய்யினால் செய்த பலகாரங்களால் நிரப்பினார்.

பிச்சைக்காரர் ஒவ்வொருவராக பிள்ளையவர்களை கரங்கூப்பி வணங்கிச் சென்றார்கள்.

அந்த வணக்கங்கள் ''பசித்தவனுக்கு உணவு இடு; உன் உள்ளத்தில் பசை உண்டாகும். பரிவு பூக்கும்; பண்பு பழுக்கும்'' என்ற போதனை வித்துக்களைப் பிள்ளையவர் களின் மனத்தில் தூவிச்சென்றன.

''இன்றுதான் மனிதாபிமானங் கொண்ட தூயவனானேன்'' என்று பிள்ளையவர்கள் பெருமையோடு முணுமுணுத்துக்கொண்டார்.

பார்த்தீர்களா பிள்ளையவர்களின் மாற்றத்தை? வாருங்கள்; நாமும் நம் வாழ்த்தைத் தெரிவிப்போம் அவருக்கு.

★

# ஒன்றில் நான்கு

ஒன்றிற் பறவையைப் போல் ஒன்றிய காதல் வாழ்க்கையும், வாளும் வேலும் பாயினும் எங்கள் தோள்வலி உயர்ந்து நிற்கும் என்று பறைசாற்றும் வீர வாழ்க்கையும், வாழ்ந்த தமிழரின் அகம் காட்டும் கண்ணாடியாக விளங்குபவை பண்டைத் தமிழ் இலக்கியங்கள். அவற்றுள்ளும் அறம் பாட, தமிழ்க் காதல் திறம் பாட எழுந்த நமது இலக்கியங்கள் காதற் சுவை குறித்துப் பாடுகையில் வேறு எந்த நாட்டு நூல்களிலும் மேம்பட்டு நிற்கின்றன.

இந்தக் கவிஞர்களுக்கே காதலைப் பாடினால்தான் இனிக்கும் போலும்! கடவுளைப் பாடுகையிலும்கூடக் கவிஞர்கள் காதலைத்தான் தேடுகிறார்கள். குழந்தையை அழைக்கையிலும், கண்ணே, மணியே என்று காதற்சுவையோடு கூப்பிட்டால்தான் கவி எழுகிறது. இக்காதல் மேலீட்டால் படைத்தலைவர், தம் போர்த்தொழிலைக்கூட மறந்துவிடுவார்களாமே. பின்னர் கவித்தலைவர் எவ்வாறு காதலை மறப்பர்?

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, நம் கவிஞர்கள் எழுதிய காதல் இலக்கியங்களிலே நான்கினை எடுத்து ஆராய்ந்துள்ளேன். நான்கும் காட்டும் மெய்ப்பொருள் ஒன்றுதான். ஆனால் நான்கு கவிஞர்களும் ஒரே கருத்தைவைத்து, தங்கள் திறமையைக்கொண்டு, நயம்படக் கவி புனைந்துள்ளார்கள். புனைந்துள்ள பொருளை வைத்துப் போட்டியிட்டுள்ள கவிஞர்கள் நாலவரும் நமக்கு நல்ல சுவை வேட்டையைத் தந்துள்ளனர். காணாவிடத்துப் பிணங்கியும் கண்டவிடத்து இணங்கியும் உள்ள தலைவியின் நிலைதான் கவியின் கருப்பொருள்.

முதலில் உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதும், அதிக மக்களால் படிக்கப்பட்டதும், சாதி, சமய, மத வேறுபாடுகளைக் கடந்ததுமான திருக்குறளில், காதற் சுவைக்கெனத் தனியாக ஒரு பாலையே வகுத்துப் பாடியுள்ள வள்ளுவரின் கருத்துப் பூங்காவில் நுழைந்து அவர்தரும் கரும்புச் சாற்றினை மாந்துவோம்.

அவளைப் பலவிதத்திலும் ஆசை காட்டி, ஏமாற்றிய கள்வன் அவன். அவள் அவன் காதலி. விரைந்து வருவேன் என்பான்; குறித்தபடி வரமாட்டான். வாடைக்காலத்தில் அவளைப் பிரிந்திருந்து தனிமையில் வாடவைப்பான். இவ்வாறெல்லாம் தவறுகள் இழைக்கும் தலைவன்மேல்

நா. நாராயணன்

அவளுக்குக் கோபம்வந்துவிடுகிறது. அவன் செய்த தவறுக்குத் தண்டனைதர எண்ணுகிறாள். அவன் வருகிறான். அவனைக் கண்டவிடத்து அவன் செய்த தவறுகளைக் காணவில்லை.

ஆம். கன்னி அவள்; கண்ணிற்கு மை எழுதும் கோல் அது. கண்ணினால் கண்டுதான் அக்கோலை எடுக்கிறாள்; மையில் நனைக்கிறாள். நன்றாகத் தெரிகிறது; மை தீட்டுகிறாள் கண்ணிற்கு. இப்பொழுது எங்கே கோலைக்காணோம்? கோல் செய்யும் செயல்தானே தெரிகிறது. எட்ட இருந்தால்தான் அதன் இயல்பு தெரியும்போலும். கிட்ட நெருங்க நெருங்கக் கோலும் கண்ணும் இரண்டறக் கலந்துவிடுகின்றனவே. இப்படித்தான்போலும் கொழுநன் குறைகளும் காணாதவிடத்துத் தோன்றும். கண்டபொழுதுதான் கோல் கண்ணோடு கலத்தல்போல, அவன் அவளோடு கலந்துவிடுகிறானே. பின் குறை எங்ஙனம் தெரியும்? கண்ணெழுதும் கோலுக்கும் காதலுக்கும் உள்ள அருமையான உவமை கூறுகிறார் பாருங்கள் கவிஞர்:

> "எழுதுங்கால் கோல்காணாக்
> கண்ணேபோல் கொண்கன்
> பழிகாணேன் கண்ட விடத்து"
>
> (குறள் 1285)

குறைகொண்ட கொழுநனைக் கண்டவுடன் பகலவனைக் கண்ட தாமரை போல் மலர்வதன் காரணம் இதுதான்போலும்.

அடுத்து, எட்டுத் தொகையுள் ஒன்றான 'குறுந்தொகை' கூறும் விருந்தினைச் சுவைப்போம். சங்க இலக்கியத்தில் அகத்துறை குறித்துப் பாடியுள்ள பாடல்களையெல்லாம் தொகுத்த சான்றோர் அடியளவால் அவற்றை நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு என மூன்றாகப் பிரித்தனர். 'நல்ல குறுந்தொகை' என்ற அடைமொழியைப் பெற்றதிலிருந்தே இப்பாடல்களின் சிறப்புத் தெள்ளிதின் விளங்கும். குறுகிய அடிகளைக்கொண்ட பாடல்கள் 401 கொண்ட குறுந்தொகை காதல் இன்பம் மாந்துதற்குச் சிறந்ததோர் இலக்கியச் சோலை.

சோலையுள் நுழையுங்கள்;

அவன்மேல் அடங்காத கோபம் அவளுக்கு. பின் என்ன? எத்தனை நாள்தான் அவனை எதிர்பார்த்துக் காத்திருப்பது? பார்த்த கண்களும் பூத்துப்போய்விட்டன. ஆனாலும் 'பாவி'யவன் வந்தால்தானே?

கோபம்கொண்ட தலைவி மெல்லிய வார்த்தைகளைப் பேசாதே என்று நெஞ்சிற்குக் கட்டளை இடுகிறாள். அவன் வந்தால் ஏறெடுத்தும் பார்க்கக்கூடாது? ஏனென்று கூடக் கேட்கக்கூடாது என்று சூளுரைக்கிறாள். வந்தவனை, வாளா இருந்து வாட்டி எடுக்க நினைக்கிறாள். இந்த நிலையிலே அவன் வருகிறான். ஊடிக் கோபிக்க வேண்டியவள் ஓடிச் சென்று வரவேற்கிறாள். சினம் கொண்ட அவள் மனததில் காதல் மனம் கனிகிறது. மெல்லிய இனிய கனிமொழிகளால் அவன் மெய்யினிக்கச் செய்கிறாள். காதலனைக் கண்டதும் அவன் ஆற்றிய துன்பங்களையெல்லாம்மறந்துவிடுகிறாள். அம்மூவனாரின் அழகான பாடல் இது,

மெல்லிய இனிய மேவரு தகுந
இவை மொழியாம் எனச் சொல்லினும் அவைநீ
மறத்தியோ வாழி என்நெஞ்சே பலவுடன்
காமர் மாஅத்துத் தாது அமர் பூவீர்
வண்டு வீழ்பு அயரும் கானல்
தன்கடன் சேர்ப்பனைக் கண்டபின்னே

(குறுந்தொகை 306)

இனி இக்கருத்தை முத்தொள்ளாயிரம் நூலில் காண்போம்.பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே முத்தொள்ளாயிரம் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. முத்தொள்ளாயிரம் பாடல்கள் அனைத்தும் வெண்பாக்கள்; அத்தனையும் பொன்பாக்கள். அவற்றில் ஒரு பா இது,

வருக குட நாடன்
வஞ்சிக் கோமான் என்று
அருகலர் எல்லாம்
அறிய, ஒரு கலாம்
உண்டாய் இருக்க, இவ்
ஒன்தொடியாள் மற்றவனைக்
கண்டாள், ஒழிந்தாள்
கலாம். (முததொள்ளாயிரம்)

அரசன் அவன்; நாட்டிற்கு; அரசி அவள்; அவனுக்குத்தான். நாட்டின் மன்னன் அவன்; அந்நாட்டின் நற்குடிகளில் அவளும் ஒருத்தி. பாண்டியனின் சொல்லழகும், மாலையிட்ட தோளழகும், பல்லழகும்,கையழகும், மெய்யழகும், காதழகும்,மூக்கழகும், அகனற மார்பழகும கண்டு அவன் மேற காதல் கொண்டாள் அவள். அவனும் உடன்பட்டான் — அவள் காதலனுக. நாளும் வருகை தரும் [illegible] உடம்பை

கோபம் கொள்கிறாள் காதலி. "வரட்டும் அந்தக் குருநாடன். நாடு அவனுக்குச் சொந்தமாக இருக்கலாம். ஆனால் அவன் 'எனக்கே சொந்தம்' வஞ்சிக்கு அவன் கோமகனாக இருக்கலாம், ஆனால் எனக்கு அவன் காதலன். என்னைவிட்டு நாட்டிடம் என்ன வேலை. இன்று ஒரு கை பார்த்துவிடுகிறேன். அவனுக்கு நாடு தேவையா? அன்றி நான் தேவையா? என்று நேரிலேயே கேட்டுவிடுகிறேன்" என்றெல்லாம் குதிக்கிறாள். கோமகனும் வருகிறான். கோபம்கொண்ட கோமளவல்லியோ குற்றமும் கோபமும் திசையறியாது ஓட, அவனை எதிர்கொண்டழைக்கிறாள். ஆசை மேலிட அவனை அணைத்து மகிழ்கிறாள். இப்படி முத்தொள்ளாயிரம் காதற் சுவைகளைப் பருகுகையில் ஐயகோ! 2,700 பாடல்களும் நமக்குக் கிடைத்திருந்தால், ஆயுள் முழுதும் அவைகளைப் பாடிப் பாடி மகிழலாமே என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. என்ன செய்வது, நமது தீயூழ்! ஒரு நூறு பாடல்களே நமககுக கிடைத்துள்ளன.

இனிப் பரணிக்கோர் சயங்கொண்டான் தன் பாவில் கூறும நயத்தைப் பருகுவோம். கலிங்கம் கொண்ட தொண்டைமானின் போர்த்திறமும், முதற் குலோத்துங்களின் வெற்றியும் குறித்துப் பாட எழுந்த கலிங்கத்துப் பரணி முழுக்க முழுக்க காதற் சுவையைத் தருவதில், ஈடு இணையற்று விளங்குகிறது.

மெல்லியலார், தங்கள் கணவர் தங்களை விட்டுக் களததிற்கு ஓடிச் சென்று, தங்களை வாடவைத்தது, பொருள்தேடச் சென்று தங்கள் இன்பத்தில் இருள் சூழச் செய்தது முதலிய குற்றங்களை எண்ணி, உள்ளம் வருந்துவர்; எல்லாம் அவரைக் காணுதபோதுதான். கள்ளன் என்பர்; அவனுக்கு உள்ளம் இல்லை என்பர். இவையெல்லாம் உதட்டளவில் வரும் சொற்களே.உள்ளம் எப்போது அவன் வருவான் வருவான் என்றுதான் ஏங்கித் தவிக்கும். ஆண்டாண்டு காலம் அவளைப் பிரிந்திருந்து அவன் வருத்தினாலும், திரும்பக் காணுகின்ற ஒரு நொடிப் பொழுதிலே அவன் இழைத்த தீங்கையெல்லாம் மறந்து, இனபம் கொள்வர்.பிரிந்தபொழுது அடைந்த துன்பத்தையெல்லாம் அன்று அடையும் இன்பத்தால் ஈடுகட்டுவர்.

பேணும் கொழுநர் பிழைகள் எலாம்
பிரிந்தபொழுது நினைந்து, அவரைக்
காணும்பொழுது மறந்திருப்பீர்!
கனப் பொற்கபாடம் திறமினோ

(கலிங்கத்துப்பரணி 65)

இவ்வாறு காலத்தால் வேறுபட்டோரும், கருத்தால் ஒன்றுபட்டோரும் ஆகிய வள்ளுவர், அம்மூவனார், சயங்கொண்டார், முத்தொள்ளாயிரப் பாடலின் ஆசிரியர் ஆகிய நால்வரும் இங்கு தந்திருக்கும் தமிழ் விருந்து; காதல் வயப்பட்டோர்க்கு நல்ல மருந்து.

வாழ்க காதல்!

★

# நமது வாழ்த்து

—[★]—

மதுரையில் "திராவிட நாடு" விற்பனையாளராகப் பணியாற்றி வருபவரும், மது இயக்கத் தோழருமான எஸ். எம் பிச்சை அவர்கள் தமது வாழ்க்கைத் துணைவியாக செல்வி வசந்த இலக்குமியை ஏற்றுக்கொண்ட மங்கல விழா 6—5—62-ல் இனிது நடைபெற்றது.

இல்லறம் புகுந்து நல்லற வாழ்க்கை நடத்தத் தொடங்கியிருக்கும் தம்பதிகளுக்கு நமது வாழ்த்துக்களை உரித்தாக்கி மகிழ்கிறோம்.

—ஆசிரியர்.

# இருவரும் ஒருவரே

**கா. பழனியப்பன்**

தமிழ் நாட்டின்—தமிழரின்—நலம் கருதுகின்ற என் போன்ற ஆயிரக்கணக்கான சகோதரத் தமிழர்களின் ஒருமித்த பாராட்டைப் பெற்று, புறவாழ்விலே குன்றின் மேலிட்ட விளக்காகப் பெருமையோடு விளங்கும் எனக்கு, என்னுடைய அகவாழ்விலே இத்தகைய ஒரு பெரிய ஏமாற்றம் ஏற்படும் என்று நான் கனவிலும் கருதவே கிடையாது.

என்னுடைய சொந்த ஊரான "தாமரைப் பொய்கை"யிலே ஆரம்பப் பள்ளியின் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றும் "இளம் ஆசிரியை" நான். எங்களுடைய குடும்பம் மட்டுமில்லாது, பரம்பரையே ஓர் ஆசிரியப் பரம்பரையாகும். இருபதாண்டுகளுக்கு முன்னர், நான் இரண்டாண்டுப் பருவத்தினளாக இருக்கும்போதே, என் தந்தை இவ்வுலகைவிட்டுச் சென்றுவிட்டார். சாவு அவரை அழைக்கவில்லை. சாவின் வாயிலில் அவர் சென்று வீழ்ந்துவிட்டார்.

காந்தியாரின் தலைமையின் கீழ், இந்தத் துணைப்பெருநிலத்தின் விடுதலைக்காகப் பெரும் படையொன்று, அறப்போராட்டம் அல்லும் பகலும் ஆங்கிலேயர்களோடு நடத்திக்கொண்டிருந்தது. "தாமரைப் பொய்கை"யிலே ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்த என் தந்தையை நாடு "வா, வா" என்று அழைத்தது. நாட்டின் விடுதலையைக்காட்டிலும் வேறோர் இன்பம் இருக்கமுடியாது என்று கருதிய அந்த நன்மகன், எரிமலை எனக் குமுறிக்கொண்டிருந்த அந்தப் போரணியிலே சேர்ந்து, போலீசாரின் குண்டாந்தடிக்குள்ளாகி "விடுதலை, விடுதலை" என்ற வீரப் பாட்டைப் பாடிக்கொண்டே உயிர் நீத்தாராம்......

ஒரு நாட்டின் விடுதலை எத்துணை எத்துணை பிணக் குவியல்களின் கல்லறை மீது எழுப்பப்படுகிறது என்பதை எண்ணிப்பார்க்கும்போது நமக்கே வியப்பாயில்லையா? மறைக்கப்பட்ட தில்லையாடி வள்ளியம்மையின் பட்டியலிலே என் தந்தையும் ஒருவரானார்.

இங்கு ஆசிரியத் தொழில் மட்டுமல்ல; நாட்டுப்பற்று எனும் அந்த நல்லுணர்வும் எங்கள் குடும்பத்திலே பரம்பரையாகப் பிறந்து வந்தது தான். நான் மட்டும் எப்படித் தப்ப முடியும்? பேதைப் பருவத்திலே இருந்த நாள் தொட்டே, நாட்டையும் மொழியையும் படித்துப் படித்துப் புரிந்துகொண்டவள் நான். என் தந்தையின் குருதி என் உடலிலும் ஓடாதா? "நலிந்துகிடக்கும் நற்றமிழரின் நல்வாழ்வு கருதி நம் எழுதுகோல் எழுதிக்கொண்டிருக்கட்டும்; தனித் தமிழை அழிக்க வரும் கொடிய மொழியின் புறமுதுகு காண நம்பேச்சுப் புயலெனக் கிளம்பட்டும்" என்று பிஞ்சு நெஞ்சத்திலேயே உறுதி செய்துகொண்டேன். இத்தகைய எண்ணத்தோடு இருக்கும் எனக்கு உறுதுணையாகக் கிடைத்த உத்தமத் தோழிதான் கயல்விழி.

இப்படிப்பட்ட நேரத்திலே தமிழரின் வளவாழ்வு காண, மலையிலே இருந்துவரும் அருவியென, "எழில் மொழி" என்பாரை ஆசிரியராகக் கொண்டு 'எழில்' வெளிவந்துகொண்டிருந்தது. எழிலிலே எழுதவேண்டும்! என்கின்ற எண்ணமும், தோழி கயல்விழியின் தூண்டுதலும் சேர்ந்து என்னை எழுதவைத்தது. நான் எழுத ஆரம்பித்தபோது; ஆரம்ப எழுத்தாளர்களுக்குக் கிடைக்கின்ற ஏமாற்றமே எனக்கும் முதலில் கிடைத்தது. ஆனால் அது நீடிக்கவில்லை. விரைவிலேயே எழிலில் என் கதைகளும், கட்டுரைகளும் வெளிந்தன. ஆசிரியர் எழில் மொழியின் பாராட்டுக் கடிதங்களும் எனக்கு அடிக்கடி வந்தன. அதுமட்டுமல்ல; ஆயிரக்கணக்கான தமிழ் நெஞ்சங்களும் என் கட்டுரைகளைக் கண்டு களித்தன; பாராட்டுக் கடிதங்களைக் குவித்தன.

இதையெல்லாம் கண்டு என்னைவிட மிகுதியாகக் களித்தவன் என் கீழ் ஆசிரியையாகப் பணியாற்றும் என் தோழி கயல்விழிதான். ஒரு நாள் நானும் தோழியும் எனக்கு வந்திருந்த கடிதங்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டே பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது அவன் என்ன நினைத்தாளோ என்னவோ, பேச்சோடு பேச்சாக என்னைப் பார்த்து, "பூம் பொழில் என்கிற உன்னுடைய பெயரை உன்னைப் பார்க்காமல் எங்கேயோ இருந்துகொண்டு ஒருவர் கேட்டாரானால் உன்னை ஓர் ஆடவர் என்றுதான் நினைப்பார்" என்றாள்.

"அப்படியா" என்றேன் குறுஞ்சிரிப்போடு.

"பின் என்னவாம்; பூம்பொழில் எனும் பெயர் ஓர் ஆணின் பெயர் போல் இல்லையா?" என்று வினவினாள். நான் ஒன்றும் மொழியாதிருந்தேன். அது எவ்வளவு பெரிய உண்மை என்பதைப் பின்னால்தான் நான் உணர்ந்தேன். புறவாழ்விலே பூரித்து நிற்கும் எனக்கு அகவாழ்விலே இப்படிப்பட்ட ஓர் ஏமாற்றம் வந்திருக்கவே வேண்டாம். நானும் அப்படி ஏமாந்தவள்தானே, என்ன செய்வது?

கடிதங்களைப் புரட்டிக்கொண்டிருந்த என்னை ஒரு கடிதம் விழுந்து விழுந்து சிரிக்கவைத்தது. ஆனால் அதே கடிதத்திலிருந்த 'உண்மை' தான் பின்னர் ஒரு நாள் என்னை அழவைத்தது என்பதை நீங்கள் அறிந்தால் சிரிப்பீர்கள். என் தோழி, எங்கேயோ இருப்போர் என் பெயரைக் கேட்டால் ஓர் ஆடவன் எனறே நினைப்பர் என்று கூறியது உண்மைதான் என்பதை இக்கடிதத்திலேயே புரிந்துகொண்டேன்.

அன்புள்ள ஆசிரியருக்கு,

............... எந்த ஒரு கருத்தையும் தள்ளுவாரும் உண்டு, கொள்ளுவாரும் உண்டு. கடந்த இதழில் எழிலில் நீங்கள் எழுதிய புரட்சியும் புதுமையும் கலந்த கருத்துக்களை நான் வரவேற்கிறேன். நன்கு சிந்திக்கும் பொழுது தமிழகம் உடனே செயல்படவேண்டிய கருத்துக்களேயன்றிப், புறக்கணிக்கும் கருத்துக்களே அல்ல. ஆனால் என் நண்பன் உங்கள் கருத்தை ஏனோ வெறுக்கிறான். "அவனுக்கு என்ன தெரியும்? ஏதோ கற்றவர்களிடம் புகழ் பெற்றுவிட்டால்மட்டும் போதுமா? என்று உங்கள்மீது சாடுகிறான்."

"அவன்" என்று என்னை எழுதியிருக்கும் அந்த எழுத்துக்களைப் பார்த்து நான் சிரிக்காமல் என்ன செய்வது? என் பெயர் அப்படி இருக்கிறதே?

பொதுவாழ்வுப் பாதையிலே என்றும் இரண்டுமேஉண்டு. சாக்கடைக்குள்ளே நீந்தவேண்டிய நிலை ஒரு புறமும், பூக்குவியல்களுக்கிடையே பூரிதது மகிழவேண்டிய நிலை மறு புறமும் இருந்துதான் தீரும். ஒரு சிலரின் எதிர்ப்புக் கண்டோ ஏசல் கண்டோ நான் அஞ்சவில்லை. எழிலைப்படிக்கும் எண்ணற்ற தமிழர்கள் என் கருத்துக்களை விரும்பி வரவேற்கின்றனர் என்பதை, 'எழில் மொழி' அவர்களின் கடிதங்களின் வாயிலாக, அறிந்துகொண்டேன். எங்கள் இருவரிடையே பொதுவாக நெருங்கிய கடிதத் தொடர்பு இருப்பது இயல்பு; இல்லையா? அந்த முறையிலேதான் முதலில் எங்களிடையே தொடர்பிருந்தது.

ஒருமுறை எழிலில் அவர் தம்முடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை மையமாக வைத்து ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதிலிருந்து அவரும் 'என்னைப்போல் திருமணமாகாத இளையவர்' என்பதைப் புரிந்துகொண்டேன். அதுமுதல் அவர் மீது எனக்கிருந்த பற்று 'ஒருவிதமாக' மாறியது. இதுவரை நான் அவர்மீது செலுத்திவந்த அன்பு வேறுவிதமாக மாறியது. நானும் அடுத்த இதழிலேயே எனக்குத் திருமணமாகாத நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டியதோடு, வாழ்வின் என் ஒரு பகுதியையே எழுதியிருந்தேன்.

அக்கிழமை இதழ் வெளிவந்தும், வராமலும் இருக்கும் வேளையிலேயே எழில் மொழியிடமிருந்து எனக்கொரு நீண்ட அஞ்சல் வந்துவிட்டது. அது அவர் வாழ்வையும் என் வாழ்வையும் பற்றியதாகவே இருந்தது. எங்கள் இருவரிடையே பெரியதோர் பிரிக்கமுடியாத 'பிணைப்பு' ஏற்பட்டது. நாட்டைப்பற்றியும் மொழியைப்பற்றியும் பேசிவந்த எங்கள் கடிதங்கள், அகத்தைப்பற்றியும் வாழ்வைப்பற்றியும் பேசின. நான் அவரைக் காதலித்தேன்; அவர் என்னைக் காதலித்தார். இனியும் பேசவேண்டுமா?...வளர்ந்துகொண்டிருந்த அக்கதை காதலாகக் கனிந்தது.

ஒருவரை ஒருவர் அறியாமல், முன்பின் பார்க்காமல் கடிதங்கள் என்கின்ற ஏணிகளின் வாயலாக, எட்டாது எங்கெங்கோ இருந்த நாங்கள் ஒருவரை ஒருவர் கண்டுகொண்டோம். ஆனால் எங்கள் கடிதங்களிலே இருந்த அந்த "ங்கள்" மாறவே இல்லை. அதைப்பற்றிப் பொதுவாக நான் கவலைப்படவில்லை. "ங்கள்" வைத்து எழுதாதீர்கள் என்று நானல்லவா எழுதியிருக்க வேண்டும்? ஏனோ எழுதவில்லை.

எங்கள் ஊர் சிறியது என்றாலும், புகைவண்டி நிலையம் ஒன்று உண்டு. அதையடுத்துக் கூப்பிடு தொலைவிலே சலசலத்து ஓடும் அருவியொன்று ஓடிக்கொண்டிருந்தது. ஆடிடும் அந்த அருவியிலே நானும் என் தோழி கயல்விழியும் பாடிக் களித்த நாட்கள் ஏராளம். இப்பொழுதெல்லாம் தோழியோடு அவ்வளவாகத் தொடர்பில்லை—'அவரோடு' தொடர்பு ஏற்பட்ட பின்னர்.

குறிப்பிட்ட ஒரு நாளிலே மலையருவிக்கு அவர் வருவதாக எழுதியிருந்தார். இதுவரை காணாத அவரைக் காணுகின்ற பூரிப்பு எனக்கு மிகுந்தது. முன்பின் அவரைச் சந்தித்ததே இல்லையாதலால், நிலையத்தை அடுத்திருந்த அருவிக் கரைக்கு, அன்றுமாலை நான்கு மணி வண்டியிலே வந்திறங்கி வருமாறு எழுதியிருந்தேன். சிறிய புகைவண்டி நிலையத்திலே சந்திப்பது எளிது என்றாலும், அருவிக்கரையிலே சந்திப்பது அதைவிட எளிதல்லவா?... மேலும் அங்கே நன்மையும்கூட... அவர் வரும், குறிப்பிட்ட அந்த நாளும் வந்தது.

எனக்கு வாய்த்த அவர் எப்படியிருப்பாரோ என்று என் உள்ளம், தானே கற்பனைக் கண்கொண்டு கண்டுகொண்டிருந்தது. கோல நிலவைப் பழிக்கும் முகத்தையும், சுந்தரமணித் தோள்களையும், சுருண்ட முடியையும், விரிந்த நெற்றியையும், பரந்த மார்பையும், இளமைப் பொலிவையும், கொண்ட 'இளங்குமரன்' ஒருவனை என் கண்கள் கற்பனையிலே கண்டன.

மாலை வந்தது; அருவிக்கரையிலே நான் மட்டும் அமர்ந்திருந்தேன். ஒருவரையும் காணோம்; வசதியாகப் போய்விட்டது. வண்டியிலே இருந்து இறங்கியதும் இங்கே வருவார்; என்னைச் சந்திப்பார் என்றெண்ணினேன். "ஓ......" என்ற ஓங்கார இரைச்சலிட்டுக்கொண்டு வண்டி நிலையத்தில் வந்து நின்றது தெரிந்தது. வருகின்ற அவரை எதிர்கொண்டு வரவேற்க, நான் அருவியின் கரையிலே எழுந்து நின்று பார்த்தேன்.

"குபு, குபு" எனப் புகை கக்கிக் கொண்டிருந்த அந்த வண்டியிலே இருந்து பதினைந்துக்கு மேற்பட்டோர் இறங்கிப் புகைவண்டி நிலையத்தைக் கடந்து வந்துகொண்டிருந்தனர். அக்கூட்டத்திலே சுமார் பத்துப்பேர் சேர்ந்தும் சேராமலும், இணைந்தும் தனியாகவும், நான் அமர்ந்திருந்த அந்த அருவிக் கரைக்கு வந்தனர். என் கண்கள், அக்கூட்டத்திலே என்னை எதிர்நோக்கி வந்திருக்க வேண்டிய அவரைத் தேடின. அவ்வளவு பெரிய ஏமாற்றம் எனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது என்பதை அப்பொழுது நான் எப்படி அறிவேன்?

அந்தக் கூட்டத்திலே நான் தேடிய அவரைக் காணோம். இருந்தால் என்னைத்தேடி வருவாரல்லவா? தனியாக நின்றுகொண்டிருந்த என்னிடம், என்போன்ற ஓர் இளநங்கை எழில் இதழைக் கரத்திலேகொண்டு என்னை நாடி வந்தாள்.

"நீங்கள்..." என்று நீட்டி விளித்தேன்.

"நான் இந்த எழில் இதழின் ஆசிரியை எழில்மொழி. நான், இங்கே எழிலுக்குக் கதை கட்டுரைகள் எழுதுகிருரே பூம்பொழில்; அவரைப் பார்க்க வந்தேன். நீங்கள்......என்ருள் எளிதாக.

"நான்...நான்'' என்று உளறிக் கொண்டே கீழே மயங்கி வீழ்ந்தேன். விண்ணும் மண்ணும் தம் நிலைமாறிச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன. ஆயிரம் இடிகள் ஒன்ருகச் சேர்ந்து இடித்து என்மீது வீழ்ந்திருந்தால் கூடநான் வருந்தியிருக்கமாட்டேன். ஆனல் அதைவிடக் கொடுமையானது இருவரும் ஒருவராகவே போனது. "நீங்கள்...'' என்ருள்.

"நான்தான் பூம்பொழில்'' என்றேன் வெற்றுச் சிரிப்போடு. திறந்த வாய் மூடாது, விழித்த விழி இமைக்காது, சிலையென அசைவற்று நின்ருள் அப்பதுமை.

எழில்மொழி இளைஞனென்று நான் நினைத்தேன். நான் இளைஞனென்று எழில்மொழி நினைத்தாள். ஆனல் இருவருமே ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். எப்படி நாங்கள் காதலிப்பது? இத்தகைய நிலை இனி யாருக்குமே ஏற்படவே வேண்டாம்

"பூம்பொழில் என்கின்ற உன்னுடைய பெயரை உன்னைப் பார்க்காமல் எங்கேயோ இருந்து கொண்டு ஒருவர் கேட்டாரானல் உன்னை ஓர் ஆடவர் என்றுதான் நினைப்பார்'' என்று அன்ரொருநாள் என் தோழி கயல்விழி கூறியதை இன்று நான் நினைத்துக் கொண்டேன். எங்கிருந்தோ ஒருவர் தன் நண்பர் கூறியதாக, "அவனுக்கு என்ன தெரியும்? ஏதோ கற்றவர்களிடம் புகழ் பெற்றுவிட்டால் மட்டும் போதுமா'' என்று எழுதியிருந்த அந்த அஞ்சலை நினைத்துக்கொண்டேன். எதை நினைத்து என்ன செய்வது? இப்படிப்பட்ட ஓர் ஏமாற்றம் ஏற்படுமென்று யார் எதிர்பார்த்தார்கள்? எதிர்பாராததுதானே, நிகழ்கிறது.

மறுநாள் மாலை எழிலுக்காக, "இருவரும் ஒருவரே'' என்ற கதையை நான் எழுத ஆரம்பித்தேன். என் தோழியர்களான எழில்மொழியும் கயல்விழியும் என்னைப் பார்த்துச் சிரித்தனர்; நான் அவர்களைப் பார்த்துச் சிரித்துவிட்டு எழுதத் துவங்கினேன்.

# மனோன்மணீயமூட்டும் நாட்டபிமானம்!

[திருவேங்கடம், பி. ஏ.]

மனோன்மணியம், பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலே பேராசிரியர் சுந்தரம் (பிள்ளை) அவர்களால் இயற்றப்பட்ட சிறந்த நாடக நூலாகும். இவ்விருபதாம் நூற்ருண்டில் இயற்றப்பட்ட நாடக நூல்கள்பலவற்றிற்கு வழிகாட்டியாய் அமைந்ததோடு, அவற்றை எல்லாம் கடந்து இன்றும் மின்னும் வைரமாய், ஒளிமுத்தாய் நம்முன் காட்சியளிக்கின்றது. இது ஆங்கில நூலைத் தழுவி எழுதப்பட்டிருப்பினும், தமிழ் மரபுக்கு ஏற்புடைத்தாய் இலங்குகின்ற தன்மையால் எல்லோராலும் போற்றிப் பாராட்டி பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஆசிரியரால் படைக்கப்பெற்ற பாத்திரங்கள் காலத்தால் மறைக்கப்பட்டாலும், அவைகளிலே பொதிந்துகிடக்கும் கருத்தூற்றுக்கள், பூமியினின்று அகழ்ந்து எடுக்கப்பெறும் தங்கத்திற்கு ஒப்புமையுடையன எனின் அஃது ஒருபோதும் மிகையாகாது. நாடகத்தினூடே வரும் சுந்தர முனிவர், நாட்டிலே இற்றை நாளிலே உலவுகின்ற போலி முனிவர்கள் போலன்றி நாட்டின் மன்னனுகிய சீவக வழுதிக்கு அவ்வப்போது அறிவுரை பகர்ந்து வந்ததோடன்றி, இறுதியில் அவனுக்கு ஆபத்து நேர்ந்தஞான்று காக்கவும் முற்படுங்காட்சி நம்மையே மெய்சிலிர்க்கச் செய்யும் மாட்சிமை படைத்ததொன்ருகும்.

பேராசிரியர் சுந்தரனுர். முனிவரின் வாயிலாக நல்லபல அறவுரைகளையும், அறிவுரைகளையும் புகுத்தியுள்ளார். அவற்றுள் பொறுக்கு மணியாக ஈண்டு ஒன்றினைக் காண்போம். அரசர்கள் கடமை கோவில் கட்டுவதன்று; குடிகளைக் காப்பதேயாகும் எனும் அரிய கருத்தினை ஒரு கேள்வி மூலமாக உணர்த்துகிருர். அஃதாவது "கோவில் ஏனு காவலர் கடமை?'' என்பதாகும்.

மக்களாய்த் தோன்றிய ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் இலக்கு (குறிக்கோள) அவசியம் இருத்தல்வேண்டும், அப்போதுதான் வாழ்க்கையில் உயரவும், உய்யவும முடியும் என்று கூறுகின்ருர். எவ்வாறெனில் பூமியில் முளைக்கும் புல்கூட ஒரு இலக்குடையதாய் இலங்குதல்போல், மண்புழு, தனுல் இயன்றவரை மண்ணைக் குடைந்து குடைந்து மென்மையாக்கி நிலத்தைச் செம்மையாக்குவதால் உழவருக்கு அதிக விளைச்சலை அளிக்கின்றது. இதனை அஃது ஓர் இலட்சியமாகக்கொண்டு வாழ்கிறது.

எங்ஙனம் தமிழக அமைச்சர்கள் இன்று தமிழகத்தை வடவருக்கு அடிமையாக்கித் தங்களுடைய வாழ்வை வளமுள்ளதாக்க முற்படுகின்றனரோ, அங்ஙனமே நாடகத்தில்வரும் அமைச்சனுகிய குடிலனும் பாண்டிய நாட்டைச் சேரனுக்கு அடிமையாக்கித் தன் வாழ்வை வளமுள்ளதாக ஆக்க முற்படுகின்ருன். ஆனல் அவன் எண்ணம் பலிக்கவில்லை. இஃது நமக்கு எதிர்காலத்தில் பயன்தரும் ஓர் உவமையாக அமையும் எனபதில் ஐயமில்லை.

அன்றே சுந்தரனுர், நாடு சுதந்தரம் பெற்று வாழ்ந்தால்தான் அந்நாடு எல்லாவித நலனும் பெற இயலும் என்பதைப் பாண்டிய மன்னன் வாயிலாக உணர்த்தாமல் உணர்த்திப் போந்தார்.

"அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டபிமானமுள் மூட்டிய சினத்தீயனரே!
வானோர்க்கு என்றுமே உவப்பு'' என்கிருர்.

அஃதாவது பிராமணர் வளர்த்தும் யாகத் தீயைக் காட்டிலும், நாட்டு மக்களின் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரியும் நாட்டபிமானம் என்னும் செந்தீயே தெய்வங்கட்கும் அதிக மகிழ்சசி விளைவிப்பதாகும் என்று அழகு படுத்திக் கூறுகின்ருர். மேலும் அவர் கூறிச்செல்வதாவது:

"சுதந்தரம் அவர்க்குயிர் சுவாசமற்றன்று
நினையுமின் நன்ருய்க் கனவினுமிதனை
என முரசறையுமே எத்திசையார்க்கும்''

போர் வீரர்களை நோக்கி ஜீவகவழுதியின் வாயிலாகச் சுந்தரனுர் "சுதந்தரம் தான் எங்களுக்குயிர், உயிரல்ல எங்கட்குப் பொரு, இதனைக் கனவினும் நினைத்துக்கொள்ளுங்கள் என்று கூறி எல்லாருக்கும் முரசெலியுங்கள்'' என நவின்றுள்ளார்.

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# வரலாறு பேசுகிறது

[நிலவழகன்]

வரலாறு பேசுகிறது. இன்றைய நேற்றைய வரலாறல்ல; பன்னுள் சரித்திரம், பழம் பெருமைகளை எடுத்துரைக்கிறது. கல்வெட்டுப் பேசுகிறது; சாசனம் பேசுகிறது, அவையெல்லாம் இன்றைய விதண்டாவாதிகளுக்கு ஓர் அறைகூவல்.

"திராவிடம் எங்கே இருக்கிறது என்கிறார்கள்; திராவிட நாட்டின் எல்லையைக் கேட்டால் தமிழகத்தின் எல்லையைக் காட்டுகிறார்கள், எல்லை தெரியாதவர்கள்" என்றெல்லாம் ஏளனக் குரல் மூலைக்கு மூலை கிளப்புகிறார்கள்.

ஒரு நாட்டுச் சரித்திரம் பேசவில்லை; பன்னாட்டுச் சரித்திரங்கள் பேசுகின்றன. ஒரு நாட்டு குரலல்ல; பன்னாட்டுக் குரல்கள் ஒலிக்கின்றன.

கிரேக்க நாகரிகம் ஏறக்குறையத் தமிழகத்தின் நாகரிகத்தை ஒத்துள்ளது. அவர்கள், தமிழகத்தை தம் மொழியில் "தமிரிகா" என்று குறித்தனர், அதோடு; அது மேற்குக் கடற்கரையில் வெள்ளைத் தீவு அல்லது மங்களூர் முதல் கிழக்கடற்கரையில் பழவேற்காடு ஏரிவரை உள்ள கடற்கரையால் சூழப்பட்ட நிலப்பகுதி என்று தெரிவித்தனர். இவ்வெல்லை இன்றைய தமிழகத்தின் எல்லையைவிட விரிவானது. அதாவது, மலையாள நாட்டைப் பூராவும் உள்ளடக்கியது. கன்னட, தெலுங்கு பகுதிகளின் ஒரு கூறும் அதில் சேர்ந்திருக்கிறது. சங்க இலக்கியங்களில் புலவர் நெட்டிமையார் பாடிய பஃறுளி ஆறும்; கபாடபுரமும் கடற்கோட்பட்டழிந்தன. இதுவே முற்கால தமிழக எல்லையாகும்.

நாம் பேசவில்லை; கல்வெட்டுப் பேசுகிறது. அவைகள் தரும் சான்றுகளைப் புரட்டினால் புரியும் உண்மை இதுவென்று.

தமிழ் என்ற பெயர் திராவிடம் என்ற பெயரின் மருவு என்பது சில ஆராய்ச்சியாளர் கூற்று. பலர் கூற்றல்ல; மொழி வரலாற்று மரபில் இம் மாறுதல் இயற்கைக்கு மாறுபட்டதன்று. திராவிடம், திராமிடம், திராமிளம், தாமிளம், தமிளம், 'தமிழ்' என்று படிப்படியாக; திருந்தித்திருந்தி இந்த மாறுபாடு நேர்ந்தது.

நமக்குக் கிடைக்கின்ற கல்வெட்டுச் சான்றுகள் இன்னும் ஆழ்ந்த நம்பிக்கைக்குக் கொண்டு செல்லுகின்றன. திராவிடம்---என்ற சொல்லுக்கு முன்னமேயே, திராமிளம்; திரமிளம் என்பவையும்; அதற்கு முற்பட்டே தாமிளம், தமிளம் ஆகியவையும் சமஸ்கிருதக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இம்மாபெரும் திரிபு திராவிடத்திலிருந்து தமிழாயிருக்க முடியாது. தமிழிலிருந்தே "திராவிடம்" என்ற மாறுபாடு ஏற்பட்டிருக்க வேண்டும் என்ற அழுத்தம் திருத்தமான முடிவுக்கு இது நம்மைத் தூண்டுகிறது.

தமிழ் என்ற சொல் திராவிடம் என்பதன் மருவல்ல என்றும்! திராவிடம் என்ற சொல்லும் மருவல்ல என்று வேறுபல ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஸ்பெயினிலும்; பிரான்சிலும்; பிரிட்டனிலும் வாழ்ந்த பழங்குடி மக்களின் குருமார் "துருய்தர்கள்" என்றே அழைக்கப்பட்டனர் இது திராவிடம் என்ற இனப்பெயருடன் சார்ந்துள்ளது என்று கருதுகின்றனர்.

திராவிடம் எங்கே இருக்கிறது? பண்டைய இலக்கியங்களில் இல்லையே; அதனால் எப்படி என்கிறார்கள்.

இருந்தால்தான் அதை நாம் ஒரு நாடு என்று அழைக்கவோ, சேட்கவோ வேண்டுமா? நம்மை எல்லாம் 200 ஆண்டுக் காலம் அடக்கி, ஒடுக்கி ஆண்டு வந்த இங்கிலாந்து அந்த நாட்டுப் பழஞ் சரித்திரங்களில் இல்லை; அது ஒரு நாடு. அந்த நாடு நம்மை ஆண்டது. நாம், கைகட்டி, வாய் பொத்திக் கிடந்தோம். இங்கிலாந்து என்ற பெயர் "ஆங்கிள்; சாக்ஸன்; ஜூட் என்ற மூன்று ஜெர்மானிய இனங்கள் குடியேறிய இடத்தின் பெயர். பெரும்பான்மை இனப் பெயரே நாட்டுப் பெயராகி, அதுவே, ஆங்கிலம் என்ற மொழிப் பெயராயிற்று.

திராவிடம் என்ற ஒரு பகுதி இருந்தால்தான் நாடு அது--என்று கேட்க வேண்டுமா? புதியதாக உருவாக்கக் கூடாதா? பாகிஸ்தான் எங்கே இருந்தது? எப்படி உருவாக்கப்பட்டது? முஸ்லீம்கள் வாழும் சிறு சிறு பகுதிகளை ஒன்றாக்கி அமைக்கப்பட்டது தானே. அதுவாவது சிறு சிறு பகுதிகள்; பெரும்பான்மையாக "திராவிடமொழி" பேசுபவர்களை அல்லவா ஒன்று திரட்ட வேண்டும் என்கிறோம்; கேரளம்; கருநாடகம்; ஆந்திரம்; தமிழகம் என்று.

பாகிஸ்தான் எந்த இலக்கியத்திலும் இல்லை. அது; ஒவ்வொரு எழுத்தாக எடுத்துச் கோர்க்கப்பட்டது, கோவையாக்கப்பட்டது; அமைக்கப்பட்டது. உலகத்தில் எங்கெங்கு முஸ்லீம்கள் வாழ்கிறார்களோ அந்தந்த நாடுகளைத் தேடிப்பிடித்து அவற்றின் முதல் எழுத்துக்களை ஒன்றாகச் சேர்த்து உருவாக்கிய பெயர் பாகிஸ்தான்.

அறிவுரை கூறுபவனையே அடக்கி ஒடுக்கி மட்டந்தட்டப் பார்க்கிறார்கள். நோய்க்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவரை அழித்து நோய்க்குப் பாதுகாப்பு அளிப்பதா? அப்படிப் பாதுகாப்பு அளிப்பதானால் இறுதியில் யாருக்குக் கேடு; தீங்கானது.

ஆண்ட இனம், மீண்டும் தன்னாட்சிப் பொறுப்பை ஏற்கத் துணிகிறது. அதற்கு ஆட்சியில் பங்கை கொடுக்க மறுக்கும் இந்தத் தேசியத்தின் போக்கை--எதேச்சதிகாரத்தை மாற்ற வரலாற்றின் குரல் பயன்படவேண்டும். புதிய வரலாறு காண இளைஞருலகம் எழவேண்டும்.

பழம்பெருமை வாய்ந்த திராவிடத்தை---வரலாறுகள் வலியுறுத்தி விளக்கிக்காட்டும் திராவிடத்தை மீண்டும் பெற அனைவரும் ஒன்றுசேர வேண்டும்.

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.